"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 2016




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


பெருமையுடன்
21வது
வருடத்தில்
RUBY'S
CATERING
020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk
உன்னத உணவு
வைபவ மண்டபம்
மகோன்னத உபசரிப்பு
திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா
ACCREDITED SRILANKAN CATERERS @
Hilton
உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......
Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 24

# கலசம்
# KALASAM

ஒலி 83

www.saivamunnettasangam.com

FREE ISSUE

# வீணாகலாமா? வீணாக்கலாமா?

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

விநியோகம்
சோ நிரஞ்சன்

விளம்பரம்
தொடர்புகள்
மா இந்துசேகரன்

நிருவாகம்
வ இ இராமநாதன்

வெளியீடு
சைவ முன்னேற்றச் சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

அண்மையில் ஒரு கோயிலுக்குச் சென்றிருந்தேன். அபிடேகம் முடிந்து பூசை வழிபாடுகள் நிறைவுற்று அர்ச்சகர் தீபம் காட்டும் வேளையில் சில அன்பர்கள் வந்தார்கள். அவர்கள் கையிலே பால், பூங்கொத்து முதலிய வற்றைக் கொண்டுவந்தார்கள். சிறிது நேரம் முன்னால் கொண்டுவந்திருந்தால் அந்தப் பால் அபிடேகத்துக்கும் அந்தப் பூ அர்ச்சனைக்கும் பயன்பட்டிருக்கும். அவர்கள் தாமதமாக வந்ததால், அந்தப் பாலையோ பூவையோ அன்று பயன்படுத்த இயலாது போய்விட்டது. அடுத்தநாளும் காலையில் அவற்றைப் பயன்படுத்த இயலும் என்று சிலர் சொல்லலாம். ஆனால் அப்போது பூ வாடியிருக்கும். பாலும் கெட்டுப்போக ஆரம்பித்திருக்கும்.

நம்முடைய சமயத்திலே, கோயிலுக்குப் போகும்போது ஏதாவது பொருள், பூவோ, பழமோ, அபிடேகத்துக்குப் பாலோ கொண்டு செல்லவேண்டும் என்று நியதி இருக்கிறது. ஆனால் அதை இந்த ஊரிலே கடைப்பிடிப்பதில் மிகுந்த சிரமம் இருக்கிறது. **மேற்கு நாடுகளில் கடையிலே வாங்கிய பூவே கிடைக்கிறது. அதுவும் வேற்று நாட்டிலிருந்தே வருகிறது. பறித்த தினத்திலிருந்து சில நாள்கள் போன பின்னரே கடைக்கே அது வருகிறது.** ஒரே நாளிலே பலர் பூவைக் கொண்டு வந்தாலும் முழுவதையும் அன்றைக்கே பயன்படுத்த இயலாது. சில வேளை களில் தேவைக்கு அதிகமாகவே மலர்கள் இருக்கும். சிலவேளைகளில் மிகக் குறைவாக இருக்கும். பாலும் அதுபோலத்தான். சில நாள்களில் மிகுதியாக இருக்கும், சிலநாள்களில் எதுவுமே இருக்காது. **பசுக்களில் இயந்திரங்களைப் பொருத்தி, அல்லது பால் சுரக்கும் ஊசிபோட்டுக் கறக்கும் பால்தான் இந்நாட்டுக் கடைகளிலே விற்பனையாகின்றது. கோயிலுக்கென்று பசு வளர்ப்பதும் நந்தவனம் அமைப்பதும் ஒரு காலத்தில் இருந்த வழக்கம். கன்றுக்கு விட்டபின்பே பால் கறந்து அபிடேகம் செய்வார்கள். அதுபோல நந்த வனத்திலே அதிகாலை எழுந்து கொய்த மலரையே மாலை கட்டவும் அர்ச்சனை செய்யவும் பயன்படுத்துவார்கள்.** இதுதான் சரியான முறையுமாகும். ஆனால், இப்போது தமிழ்நாடு, ஈழம் போன்ற ஊர்களி லேயே இந்த வழக்கம் நடைமுறையில் அருகிவிட்டது. இந்த நாட்டிலே அந்த முறையை நினைத்தும் பார்க்கமுடியாது. அப்போ இதற்கு விடைதான் என்ன?

பூக்கள், பழங்கள், பால் போன்ற பொருள்களைக் கொண்டு வருவோர் கோயிலுக்கு அவற்றை நேரத்துக்குக் கொண்டுவந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். இல்லையேல், இந்த அன்பர்கள் அதைப் பணமாகக் கோயிலிலே செலுத்தலாம். **கோயில் நிருவாகத்தினர் அந்தப் பணத்தைப் பால், பூ, திரவியங்கள் வாங்குவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.** அதற்கென ஓர் உண்டியலை வைத்து மக்களை அதிலே பணத்தைப் போடும்படி செய்யலாம். அப்படிப் பயன்படுத்தினால்.... பத்தர்கள் - பிந்தி வருவோரும் - பணம் செலுத்துவார்கள், கோயிலில் எப்போதும் அபிடேகத் துக்கு அளவாகப் பால் இருக்கும், அர்ச்சனைக்கு மலரும் பழங்களும் இருக்கும். பாலும் பூக்களும் வீணாகா.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| தீபாவளி.... ? | 03 |
| திருக்கோயில் வழிபாடும் பண்பாடும் | 05 |
| சைவத் திருமுறைப் பாடல்கள் | 06 |
| சிவபெருமானின் தத்துப்பிள்ளைகள் 2 | 07 |
| மார்கழியில்... | 12 |
| வடமொழியும் தென்மொழியும் | 13 |
| திருநீலநக்கநாயனார் | 18 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 29 |
| 'பசுவுக்கொரு வாயுறை' | 30 |
| மஹாராஷ்டிரம் பயணக்கட்டுரை - வைத்தியநாதம் கோயில் | 32 |
| Hinduism in search of answers | 35 |
| கண்ணனும் தாத்தாவும் | 40 |
| Let us be Hindus... | 44 |
| சற்புத்திரர்களே ஆபரணம் | 46 |
| Thirukural stories | 47 |


**அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்**

# தீபாவளி...?

**தீபாவளிக் கொண்டாட்டம் பற்றிப் பலகதைகள் பலவாறு சொல்லப்பட்டுவருகின்றன. பகுத்தறிவாளர்கள் தீபாவளி திராவிடர் விழா அன்று. பார்ப்பான் நுழைத்தது என்பர். குஜராத்தியர் இராமர் அயோத்தியை வந்தடைந்த நாளென்பர். வேறுசிலர் நரகாசுரனை வதைத்த நினைவுதினம் என்பர். இப்படிப் பல வாதிப்பிரதிவாதங்கள் நடைபெற்றவண்ணமே இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் கடந்து ஒரு விவரம் உண்டு என்பதைப் பலர் அறியார். அந்த விவரம் கலசம் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது.**

**- ஆசிரியர்**

தீபாவளியென்னும் நன்னாளைப் பொன்னாளாக யாண்டும் கொண்டாடுகிறார்கள். ஆனால், அதன் உண்மை அறிந்தவர்கள் ஒருசிலரேயாவார்கள். அதனைச் சிறிது இங்கு விளக்குவோம்.

பெரும்பாலோர், நரகாசுரனைக் கண்ணபிரான் சங்கரித்தார். அந்த அரக்கனை அழித்த நாளே தீபாவளியென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். நரகாசுரனைச் சங்கரித்த நாள் அதுவாக இருக்கட்டும். ஆனால், கேவலம் ஒரு கொடியவனைக் கொன்ற நாளுக்கு, ஒரு கொண்டாட்டம் நிகழ்வது, யாண்டும் எக்காலத்தும் இருந்ததில்லை. அப்படி இருக்குமாயின், இரணியனைக் கொன்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், கம்சனைக் கொன்ற நாள், இடும்பனை, பகனைக் கொன்ற நாள், துரியோதனனைக் கொன்ற நாள், அவ்வாறே அந்தகாசுரன், சரந்தராசுரன், இரண்யாட்சன், திருவணாவர்த்தன் இப்படிப் புகழ்படைத்த அரக்கர்கள் ஒவ்வொருவரையும் கொன்ற நாள்களையெல்லாம் கொண்டாடுவதாயின் ஆயுளே அதற்குச் சரியாய்விடும். ஆகவே நரகாசுரனைக் கொன்றதற்காக தீபாவளி ஏற்பட்டதன்று.

### தீபம் - விளக்கு, ஆவளி - வரிசை

**தீபத்தை வரிசையாக வைத்துச் சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாள், தீபாவளி எனவுணர்க.** தீபமங்கள ஜோதியாக விளங்கும் சிவபெருமானை நிரம்பவும் விளக்கேற்றி வணங்கினார்கள் நமது முன்னோர்கள். திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வணங்குகிறார்கள் அன்றோ?

**"விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"**
என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு

சிவவிரதம் எட்டு எனக் கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டம் புகல்கின்றது. அவையாவன:

1. சோமவார விரதம்
2. உமாமகேச்சுர விரதம் (கார்த்திகை மாதம் பௌர்ணமி)
3. திருவாதிரை விரதம் (மார்கழியில்)
4. சிவராத்திரி விரதம் (மாசியில்)
5. கல்யாணவிரதம் (பங்குனி உத்திரம்)
6. பாசுபத விரதம் (தைப்பூசம்)
7. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அஷ்டமியில்)
8. கேதார மாவிரதம் (இதுதான் தீபாவளி)

**தொல்லைவல் வினைகழித்துத் தருஞ்சோம வாரமா திரைநோன் பன்றிப்**
**புல்லிய வுமாமகேச் சுரஞ்சிவராத் திரிமுறையில் பொருந்த நோற்கப்**
**பல்வினையுந் தொலைந்திடுகே தாரமண விரதமிவை பரமநோன்பு**
**கொள்ளுறுசூற் படைவிரத மெனுமெட்டுஞ் சிவவிரதங் குணிக்குங் காலே**

## இந்த விரதம் நோற்கும் முறை:

புரட்டாசி மாதம் பூர்வபட்சம் (வளர்பிறை) அஷ்டமியில் தொடங்குதல் வேண்டும். நிறைகுடம் வைத்து, அதில் சிவபெருமானை ஆவாகனஞ்செய்து, இருபத்தொரு இளையுடைய நூலைக் கையிலே புனைந்து, அர்ச்சனை செய்து, தூப தீப நிவேதனம் புரிந்து வழிபடவேண்டும்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முந்தின நாள், சதுர்த்தசியிலன்று, அதிகாலையில் எழுந்து நீராடி, தூய ஆடை உடுத்து, நெல்லின் மீது நிறைகுடம் வைத்து மாவிலையும் தருப்பையும் வைத்து, அதிலே சிவமூர்த்தியை நிறுவி, சிவமாகவே பாவனை புரிந்து, தூபதீப நிவேதனங்கள் செய்து வழிபடவேண்டும்.

மறுநாள் அமாவாசையன்று காப்பை அவிழ்த்துவிட்டு, உணவருந்தவேண்டும். இந்தவிரதம் கேதார விரதம் எனப்படும்.

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கிச் சிவபெருமானை மட்டும் வலம்வந்து வழிபட்ட காரணத்தினால், உமாதேவியார் வெகுண்டு, இடப்பாகம் பெறும்பொருட்டுத் திருக்கயிலாய மலையினின்றும் நீங்கி, கௌதம முனிவருடைய வனத்தை அடைந்தார். அவ்வனம் அம்பிகையின் வரவினால் மிகவுஞ் செழிப்புற்றது. பாம்புந் தவளையும், அரவும் கீரியும், உரகமும் கருடனும் உறவாடின.

கௌதமர் கௌரியைத் தொழுது துதித்தனர். இந்த விரதத்தைக் கௌதமர் கூற, விதிப்படி உமையம்மையார் நோற்று, இறைவருடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தனர்.

கௌரி நோற்ற காரணத்தால் கேதாரகௌரி விரதம் எனவும் இது பெயர்பெற்றது.

இருபத்தொருநாள் அநுட்டிக்க முடியாதவர்கள் ஐப்பசி, தேய்பிறைச் சதுர்த்தசியன்று மட்டும் மேற்கூறிய முறைப்படி அநுட்டிக்கவேண்டும்.

இவ்விரதத்தை எல்லோரும் மேற்கொண்டு. அன்று சிவமூர்த்தியை வழிபட்டு, நலம் பெறுதல் வேண்டும். தீபங்களை வரிசையாக ஏற்றி, அன்புடன் வழிபடவேண்டும்.

தீபாவளியன்று மது மாமிசங்களை உண்டு, களியாட்டம் களிக்கின்ற மாந்தர் பெரும்பாவத்திற்கு ஆளாவர். இனியேனும் அந்தத் தீயநெறியைக் கைவிட்டுத் தூயநெறி நின்று நலம் பெறுவார்களாக.

நன்றி: வாரியார் விரிவுரை விருந்து (பக்கம் 84)

# திருக்கோயில் வழிபாடும் பண்பாடும்

*'கலசம் பத்திரிகையில் வரும் ஆசிரியர் தலையங்கம் படிப்பேன். நறுக்கென்று விடயம் சொல்லப்பட்டிருக்கும். பயனுள்ள கருத்துக்களும் இருக்கும்' என்று நேரிலே பார்ப்போர் பலர் சொல்லியிருக்கிறார்கள். அதை உறுதி செய்வதுபோலப் **"புனிதம் காப்போம்"** என்ற தலைப்பில் பொங்கலன்று வெளியான எண்பதாவது கலசம் தலையங்கத்தையும் **"பத்திப் பாடல்களும் முத்திப்பாடல்களும்"** என்ற தலைப்பில் சித்திரை மாதம் வெளிவந்த எண்பத்தொராவது இதழின் தலையங்கத்தையும் படித்துச் சுவைத்த இரு அன்பர்கள், தாங்கள் வேறு சஞ்சிகைகளிலே படித்தவற்றை, கருத்து ஒற்றுமைகருதி வழங்கிய கட்டுரைகள் இங்கே அடுத்த இரு பக்கங்களிலே பிரசுரமாகின்றன.*

சைவத் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குபவை ஆலயங்களாகும். ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டுதான் சைவத் தமிழர்களின் கலை, பண்பாடு, பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட்டமை மறக்கமுடியாதது. எம்மண்ணில் என்றும் இல்லாதவாறு சைவத் தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அருகிவருவது வேதனை தருகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆலய திருவிழாக்காலங்களில் வீடுகளும் ஆலயங்களாக மாறுவதுண்டு. ஆலய கொடியேற்றத்துக்கு முன்னரே மக்கள் தங்கள் வீடுகளைச் சுத்தம் செய்து புனிதம் பேணுவார்கள். திருவிழா முடியும்வரை தங்கள் குலதெய்வங்களின் நினைப்போடு வாழ்வர். திருக்கோயில்களில் ஆண்களும் பெண்களும் ஆசாரத்துடனும் பண்பாட்டுக்குரிய ஆடைகலாசாரத்துடனும் ஒன்றுபட்டு நிற்பர். இன்று திருக்கோயில் வழிபாட்டிலும் நாகரிகமோகம் தலைதூக்கிவிட்டது. ஆலய திரு விழாக் காலத்திற்கூட ஆடவர்கள் சிலர் காற்சட்டை, மேலாடை அணிந்துதான் வருகிறார்கள். பல பெண்பிள்ளைகள் பிறநாட்டுக் கலாசார உடைகளோடு கோயில் திருவிழாவுக்கு வருகிறார்கள். இவை எமது பண்பாட்டுச் சிதைவுக்கு அடையாளமாகத் தொடர்கின்றன.

புலம்பெயர்ந்த எமது உறவுகளுள் சிலர் பழைய பாரம்பரியத்தோடு இங்கும் அங்கும் கோயில் வழிபாட்டைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனால், புலம்பெயர்ந்து சென்று தற்போது ஊருக்கு வருகை புரிபவர்கள் ஆலயத் திருவிழாவுக்கு வரும்போது, ஒருசிலர் வெளிநாட்டு ஆடைகலாசாரத்தோடு வந்து வழிபாட்டில் ஈடுபடுவது வேதனை தருகிறது. இத்தகைய காட்சியானது ஆலய வழிபாட்டுக்காக வருகின்ற பலரது கவனத்தையும் திசைதிருப்புகிறது.

திருக்கோயில் வழிபாடு புனிதமானது. எளிமையாக வந்து பத்தர்கள் அனைவரும் சமத்துவமாக வழிபாடு செய்யும் சூழலை நாம் களங்கப்படுத்தக்கூடாது. ஆலய திருவிழாக் காலங்களிலும் திருமணச் சடங்குகளிலும் எமது பாரம்பரியமான பண்பாட்டு ஆடைக் கலாசாரத்தை இயன்றவரை நாம் பேணவேண்டும். இல்லையேல் பாரம்பரிய கலாசாரம் எம்மைவிட்டு நீங்கிவிடும். அடுத்த சந்ததி தமக்கென ஒரு கலாசாரக் கட்டமைப்பு இல்லாத இரவல் பண்பாட்டுச் சமூகமாக இடர்ப்படும் என்பதில் ஐயமில்லை.

திருக்கோயில் திருவிழா காலங்களை வழிபாட்டுக்காக மட்டுமன்றி எமது பாரம்பரிய வாழ்வியல் பண்பாடுகளைக் காத்து அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் காலமாகவும் கருத வேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" எனச் சிலர் கூறலாம். இவை எமது பாரம்பரிய பண்பாடுகளிலே புதுமை செய்வதாகக் கருதி உள்ளதையும் இழப்பதாகவே முடிந்துவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**நன்றி: இந்து ஒளி, தீபம் 20 சுடர் 6** **தகவல்: திரு இ பத்மநாதன்**
August - September 2016

# சைவத் திருமுறைப் பாடல்கள்

திருவருளை ஒப்புக்கொண்டோ, நம்பியோ பாடிய பாடல்கள் வேறு, திருவருளைப் பெற்றுத் திருவருளோடு கலந்து நின்று பாடிய பாடல்கள் வேறு. ஆதலால், தேவார திருவாசகங்களோடு ஏனைய சமயப் பாடல்களை ஒப்பிடக்கூடாது. அவை தனிப்பெருஞ் சிறப்புவாய்ந்தவை. மக்களனைவரும் திருவருளைப் பெறவேண்டும் என்னும் விழுமிய நோக்கம் காரணமாகத்தான் இறைவன் தமிழில் தேவார திருவாசகங்களைத் தோற்றுவித்தான். நமக்கு வரும் துன்பங்களைத் துடைத்து இன்பத்தையும் அமைதியையும் வழங்குவதில் சைவத் திருமுறைப் பாடல்கள் ஈடும் எடுப்பும் அற்றன.

இறைவழிபாடு, தன்னைப்பற்றிய வேண்டுதல், பிறர் பற்றிய வேண்டுதல், ஆராதனை, தியானம் என நான்கு வகையாகும். துன்பநீக்கம் அல்லது இன்பஆக்கம் ஆகிய இவற்றில் ஏதாவ தொன்றைத் தனக்காகவோ பிறருக்காகவோ பிரார்த்தனை செய்தல் முதலாவதான வேண்டுதற் பகுதியாகும். கடவுளைப் பற்றியோ அல்லது மனிதவடிவில் வந்த கடவுள் அவதாரங்களைப் பற்றியோ பத்திபூர்வமான கிரியைகளால் அறிவு, உணர்வு, விருப்பம், கற்பனைத் திறன்கள் செறிய ஆராதிப்பதே இரண்டாவதான ஆராதனையாகும். இறைவனுடைய அருள்வெளிக்குள் செல்லத் தன்னைத் தயார்செய்துகொண்டு, தனது உள்ளும் புறமும் அருள் எல்லையாகவே இருக்கும்படி செயலற்ற மௌன நிலையில் விழிப்புடனிருக்கும் உயர்ந்த நிலை மூன்றாவதான தியானம் எனப்படும். இந்த இலக்கணத்திற்கு நேர் இலக்கியங்களாக அமைந்து விளங்குவன தேவார திருவாசகங்களாகும். ஆன்மாக்களை இறைவன் திருவருளில் ஈடுபடச்செய்யும் பேராற்றல் இவைகளுக்கு உண்டு.

பல்வேறு சந்தங்கள், புராண வரலாறுகள், தலத்தின் சிறப்புக்கள், இயற்கைக் காட்சிகள், தத்துவ உண்மைகள், ஆன்மவாழ்வின் அவல நிலைகள், அந்நிலைபற்றிய முறையீடுகள், அவற்றினின்றும் விடுபடும் வழிகள் என்னும் இவற்றின் கருவூலமாக அமைந்த பாடல்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்னும் பேர்விருப்பத்தினாலேயே எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகளின் ஆணைவழி நின்று இந்தத் திரட்டினை வெளியிடுகின்றோம்.

**உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிப்பெருஞ் செல்வமாக திருமுறைகள் தமிழ் மொழிக்கு அமைந்துள்ளன.** பெறுதற்கரிய செல்வத்தை பேணிக் காப்பது எம்மனோர் கடமையே. பொருள் புரியாது இசைக்குமட்டும் இசையும் ஏனைய மொழிப் பாடல்களைப் பாடி ஆடாது செந்தமிழ் மக்கள் மொழிக்குமொழி தித்திக்கும் நால்வர் பாடல்களையும் நாள்தோறும் பொருளுணர்ந்து பாடிப் பணிந்து ஈடேறுவார்களாக.

**யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையின் வெளியீடாகிய 'சைவத் திருநெறித் திரட்டு' பதிப்புரையிலிருந்து.**
**நன்றி க தி மூர்த்தி**

**இந்த வருடம் நவராத்திரிவிழா விஜயதசமியுடன் 11 நாள்கள் நடைபெறுகிறது. நவராத்திரி 9 நாள்கள், தசமியுடன் 10 நாள்கள்தானே கொண்டாடவேண்டும் என்பவர்களுக்கு: நவராத்திரி சுத்தப்பிரதமையில் (அமாவாசை கலக்காத) தொடங்கி திருவோணமும் தசமியும் வரும் நாளில் முடியவேண்டும் என்பதுதான் முறை. இந்த இரு தினங்களுக்குமிடையில் எத்தனை நாள்கள் வந்தாலும் நவராத்திரி அத்தனை நாள்களுக்கும் நீடிக்கும் அல்லது குறுகும். சென்ற கலசம் இதழில் விஜயதசமி செப்டெம்பர் 10 என்று குறிப்பிட்டுள்ளோம். 11இல் தான் விஜயதசமி. தவறுக்கு வருந்துகிறோம்.**

சுந்தரமூர்த்தி நாயனார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் சரித்திரத்தைப் பின்வருமாறு தொடக்கிவைத்தார்,

**"மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"**

எந்த வேளையிலும் சிவபெருமானுடைய அருளாகிய பாதங்களை அல்லாது வேறு நினைப்பில்லாத திருஞானசம்பந்தருக்கும் அவருடைய அடியார்களுக்கும் நான் அடியேன் என்றார்.

# சிவபெருமானின் தத்துப் பிள்ளைகள் 2

*இடைக்காடு சுவாமி*

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பிறப்பு ஓர் அவதாரம். சுந்தரமூர்த்தி நாயனாரைப் போலவே இவரும் இறைவருடைய படைப்பு. பிரமனால் படைக்கப்பட்டவர் அன்று. அவருடைய பாடல்களிலேயே இதற்கான சான்றுகள் உள. சுந்தரமூர்த்திநாயனாரின் குறிப்பை எடுத்துக்கொண்ட நம்பியாண்டார் நம்பிகள், தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் பின்வருமாறு விரித்தார்.

**"வைய மகிழ, யாம்வாழ, அமணர்வலி தொலைய..... பருப்பதத்தின் தையலருள் பெற்றனன்"** என்றார்.

அமண் வலி தொலைய என்றார், அமண் தொலைய என்று சொல்லவில்லை. சேக்கிழார் இந்தக் குறிப்புக்களைத் தொடர்ந்து, **"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப் பூதபரம்பரை பொலிய"** என்று சரித்திரத்தை எடுத்தாண்டார்.

சீர்காழிப் பதியிலே சிவபாதவிருதயர், பகவதி என்ற சிவப்பிராமணத் தம்பதியர் வாழ்ந்தனர். அந்த நாள்களிலே சமணர்களின் ஆதிக்கம் மிகுந்து சைவஒழுக்கங்கள் குன்றிக்கொண்டு போவதை உணர்ந்த சிவபாதவிருதயர் சமணர்களுடைய கெடுதிகள் நலிந்துபோக நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு பிள்ளையைத் தனக்குத் தந்தருளவேண்டுமென்று பூசைகள் விரதங்கள் கடைப்பிடித்துக் கடுந்தவஞ்செய்தார். தோணிபுரத்துப் பெருமானை முன்வைத்துத் தவஞ்செய்தார். சைவம் விளங்க மகன் வேண்டும், சமணர்வலி தொலையவேண்டும் என்று மிகவும் வேண்டினார்.

இறைவர் - தோணிபுரத்தீசர் அருள்கூர்ந்தார். **"சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்"** - சேக்கிழார்

மூன்றுவயதுப் பராயத்துக்கு முந்திய நாள்களிலே பிள்ளையார் பலவேளைகளிலும் **"வெருக்கொண்டாற்போல் அழுவார். குறிப்பயலாய்"** என்று அறிவிக்கிறார். **"பண்டு திருவடி மறவாப் பான்மையோர்"** என்றும் அறிவிக்கிறார். முந்திய பிறவியில் சீவன்முத்தராய் இருந்தவர் என்பது குறிப்பு. அப்படியானால், ஏன் அவதரித்தார் என்றால் ஒரு நோக்கம் கருதி இறைவரால் அனுப்பப்பட்டார் - இறைவருடைய படைப்பு. திருவடி மறவாப் பான்மைக்கும் முன்பிறவிக்கும் பிள்ளையாருடைய பாடல்களிலேயே சான்றுகள் உள்ளன.

**திருத்துருத்திப் பதிகம்:**

**துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி**
**மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேற்**
**பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்**
**டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே**

வேறு ஒரு தலப்பாடலில் **"பாலனாய தொண்டு செய்து பண்டுமின்றும்"** என்றும் பாடியிருக்கிறார். "பாலன்" என்றது மகன்மைக் குறிப்பு.

பிள்ளையாருக்கு இரண்டு வயது முடிகிற காலத்தில் ஒருநாள் அடம்பிடித்துத் தந்தையாருடன் தோணியப்பர் கோயிலுக்குப் போனார். தந்தையார் குழந்தையைத் தோளினின்றும் கீழே இறக்கிவிட்டுப் பாதுகாப்பாக நிற்கச்சொல்லிக் குளத்தில் இறங்கி நீராடினார். நீரில் மூழ்கி மூச்சையடக்கிச் செய்யும் பூசைமுறை ஒன்றுண்டு. அப்படித் தந்தையார் மூழ்குதலும் - இரண்டு மூன்று விநாடிகள் போயிருக்காது - பயந்தவர்போல் பிள்ளையார் அழத் தொடங்கினார். குளத்திலே பூவுலகத் தந்தையைக் காணார். தோணியப்பர்கோயில் விமானச் சிகரம் பார்த்து "அம்மே அப்பா" என்று கூவியழுதார்.

**மறைமுனிவர் மூழ்குதலும் மற்றவர்தம் மைக்காணா(து)**
**இறைதரியார் எனும்நிலைமை தலைக்கீடா ஈசர்கழல்**
**முறைபுரிந்த முன்னுணர்வு மூளவழத் தொடங்கினார்**
**நிறைபுனல்வா விக்கரையில் நின்றருளும் பிள்ளையார்**

பிள்ளையாருக்கு முன்பிறவியில் தான் இறைவருக்குச் செய்தபூசை வழிபாடுகளின் நினைவுகள் தோன்றின. மேலும் உள்ளுணர்வாக இவர் தந்தையாராகிய சிவபாவிருதயர் சார்பிலே தோணியப்பரையே தந்தையாகக் கண்டுகொண்டிருந்தார். இப்போ, சிகரம் பார்த்து அழுதபடி "அம்மே அப்பா" என்று கூவினார். திருத்தோணியப்பரும் பிள்ளையார் கண்டுகொண்டிருக்க உமாதேவியாருடனே இடபவாகனத்தில் தோன்றி திருத்தோணிபுர விமானத்தலிருந்து இறங்கி வந்தார். உமையம்மையாரைப் பார்த்து, **"துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்தூட்டு"** என்று கூறினார். அம்பிகையும் அபரஞானம், பரஞானங்களுடனே **"எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி"** பொன்கிண்ணத்தைக் குழந்தையின் கையிற் கொடுத்து அணைத்துக் கண்ணீரைத் துடைத்து, "இதோ பாலடிசில் உண்பாயாக" என்றார். பிள்ளையாருக்குத் தன் பூலோகத் தாயின் மடியிற் கிடந்து முலைகளிலே மாறி மாறிப் பால் அருந்தும் நினைவும், தாயாரின் காதைப் பிடித்துத் தோட்டுடன் தடவித் தடவியே பால் குடிப்பதும் ஞாபகத்துக்கு வந்திருக்கலாம். பின்னால் அவர் **"தோடுடைய செவியன்"** என்று பாடப்போகிறார் அல்லவா? பிள்ளையார் அம்மையின் முகத்தை உற்றுப் பார்த்தபடி ஞானப்பாலை உண்டார். அம்மையாரும் அப்பரும் இடபவாகனத்தில் சிறிது மேலெழுந்து நின்றருளினர்.

**யாவருக்குந் தந்தைதாய் எனுமிவரிப் படியளித்தார்**
**ஆவதனா லாளுடைய பிள்ளையா ராய்அகில**
**தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்**
**தாவில்தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினார்**

இந்தப் பேறுபெற்றதனால் இந்தக் குழந்தைப்பிள்ளையார், ஆளுடைய பிள்ளையாரென்றும், ஞானசம்பந்தர் என்றும், பாலறாவாயர் என்றும் பெயர்பெற்றனர்.

சிவபாதவிருதயரும் நீராடலை முடித்துக்கொண்டு கரையேறி மகனிடம் வந்தார். வாயினின்றும் பால்வடிய அழுகை நீங்கி ஆனந்தமாய் நின்றார் பிள்ளையார். தந்தையார் யார்யாரோ, அழுக்கு மேனியுடன் என்னவோ பிள்ளைக்குப் பால் ஊட்டியிருக்கிறார்களே என்று கலங்கிப்போனார். அங்கு கண்ட ஒரு தடியை எடுத்துக் கோபிப்பதுபோல் ஓங்கி "யார் உனக்குப் பால்கொடுத்தது? காட்டு" என்றார். பிள்ளையும் புன்சிரிப்புடன் சுட்டுவிரலை ஆகாயத்தில் நீட்டித் தான் கண்டுகொண்டிருக்கும் அம்மையப்பரைக் காட்டி தேவாரப் பாடலாகவே பதில் கூறினார். பூவுலகத் தந்தையார் உணரும்படி அடையாளங்களையும் கூறிக் காட்டினார்.

**தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி**
**காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்த வருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே**

'தோடுடை செவியன்', 'விடையேறி', 'மதிசூடி', 'சுடலைப் பொடி பூசி' - இவை அடையாளங்கள். அதோ நிற்கிறானே அந்தப் பிரமாபுரம் மேவிய பெம்மான், இவன்தான் எனக்குப் பாலூட்டியவன். என்னை ஆளாக்கினான். இவன் கள்வன். உன்னிடமிருந்து என்னைத் திருடிக்கொண்டான். வேதங்களை ஓதியே கலைஞானம் முற்றிய சிவபாதவிருதயருக்குச் சுட்டிக் காட்டியும், அடையாளங்களைக் கூறியும், அம்மையப்பரைக் காணமுடியவில்லை. சிவஞானம் பற்றிய பிள்ளையார் முழுமையாகக் கண்டு இலக்கணங்களை உணர்ந்து இறைவர்தாம் "தந்தை தாய்" என்று பழைய ஆவணங்களையும் உணர்ந்து உறுதிப்பட்டார். "தோடுடைய செவியன்" என்ற முதற் சொல்லிலேயே இறைவரை ஒருவராயும் இருவராயும், ஆண் பெண்ணாயும் தந்தை தாயாகவும் கண்டார். இந்தப் பதிகம் முழுவதும் சிறந்த பாடல்கள். இந்த முதற்பாடல் ஓர் அற்புதம். இதிற் பொதிந்திருக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஏராளம். இங்கு தந்தை தனையன் உறவுபற்றிக் கூறுவதோடு நிறுத்துகிறேன். அன்பர்களே திருமுறைகளை உரையுடன் படியுங்கள்.

சிவபாதவிருதயர் இப்போது மகனின் நிலைமையை உணர்ந்தார். தந்தையார் பின்தொடரப் பிள்ளையார் கோயிலுட் புகுந்து தன் இரண்டாவது பதிகத்தை நன்றி செலுத்துமுகமாகப் பாடினார். பத்துப் பாடல்களிலும் **"இமையோரேத்த உமையோ டிருந்தானே"** என்று பாடினார். வாவிக் கரைக்கு வந்து எனக்கு ஞானமூட்டிய இறைவர் இங்கு வந்தார்; இருக்கிறார் என்று பாடினார்.

இனித் தந்தையார், தனயன் யாத்திரை பண்ணவும் வழிபடவும் வசதிகளும் உதவிகளும் செய்த விதத்தைப் பார்ப்போம்.

1. பிஞ்சுக் கைகளாலே தட்டித் தாளம்போடுவதற்கு இரங்கி ஓசையோடு கூடிய திருவைந்தெழுத்து முத்திரையுடைய பொற்றாளங்கள் கொடுத்தார்.
2. முத்துக்குடை முத்துப்பல்லக்கு, முத்துச் சின்னங்கள் முத்துப் பந்தர் கொடுத்தார்
3. பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் சிவனடியார்கள் அமுதுண்ண படிக்காசு கொடுத்தார்
4. சிவபாதவிருதயர் யாகம் பூசை செய்யச் செலவுக்கு இறைவனை வேண்டிப்பெற்றுத் தந்தையிடம் கொடுத்தார்.

யாத்திரையின்போது ஒரு தலத்திலிருந்து மற்றத் தலத்துக்குப் போகும்போது இறைவருடைய கருத்தை அறிந்து - உத்தரவு பெற்று யாத்திரை தொடர்ந்தார். அற்புதங்கள் நிகழ்த்தியபோதும் தந்தை இறைவருடைய ஒப்புதல் பெற்றார். பாண்டிநாட்டில் சமணருடன் செய்த வாதில் தந்தை இறைவரை மிகநயந்து கலந்து ஆலோசித்து அவருடைய ஆணையைப் பெற்றார்.

திருவாலவாயில் சமணருடன் செய்ய நேர்ந்த வாதுகள் தொடர்பாக மூன்று பதிகங்கள் பாடி இறைவருடைய சம்மதம் பெற்றார். பிள்ளையாருக்குத் தன் பூலோகத் தந்தையாரின் தவம், தன் அவதார நோக்கம் - இறைவர் தந்தையுடைய நோக்கம் - எல்லாம் தெரியும். இருந்தும் தன்மேற் பழி சேருமோ, சைவத்துக்கு இழுக்காகுமோ என்று மீள்பார்வை செய்தார். சமணர் போட்டியிலே தோற்றால், கழுவிலே தாமாக ஏறிச்சாவார். ஒவ்வொரு சமணகுருவும் கையிலே கழுவுடன்தான் வெளியே போவர். போட்டிகளில் வெற்றி சைவத்தின் பக்கம் என்பது உறுதி. சமணர் தோற்றால் மன்னரே தண்டனையாகக் கழுவேற்றச் சொல்லி ஆணை கொடுப்பார். இந்த வகையாலே பிள்ளயொருக்குப் போட்டியின் பயனைப்பற்றி எந்தப் பொறுப்பும் இல்லை. இருந்தாலும் பாலகன் - கருணையின் நிமித்தம் தன் ஞானத் தந்தையை மீண்டும் மீண்டும் கேட்டு ஆராய்ந்தார்.

1. செய்யனே என்று தொடங்கும் பதிகத்தில் பத்துப் பாடல்களிலும் **"அஞ்சலென்றருள்"** என்று வேண்டினார். திருக்கடைக்காப்பில் **"மேதினிக்கு ஒப்ப"** என்று பாடினார். **பொருள்:** உலகத்துக்கு நலம் பொருந்த, மன்னருக்கும் சைவத்துக்கும் நலம் பொருந்த இறைவர் அருளால் நான் பாடிய பாடல்.
2. **"காட்டு மாவது துரித்துரி"** என்று தொடங்கும் பதிகம். அதில் பத்துப் பாடல்களிலும் **"நான் வாது செய்யத் திருவுள்ளமே..", "அழிக்கத் திருவுள்ளமே", "வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே"** என்றென்றும் வினவினார். அழித்தல் என்பதற்கு இங்கு அவரின் தீமையைப் போக்குதல். கற்பழிக்கத் திருவுள்ளமே என்றதும் - சமணர் தாங்களாகவே கற்பித்த பொய்க் கொள்கைகளை அழிக்க.
3. **"வேதவேள்வி"** என்று தொடங்கும் பதிகத்திலும் மீண்டும் தந்தையாரான இறைவரை இதே வினாக்களைக் கேட்டார்; உறுதி செய்தார். பிள்ளைகள் பெற்றோரை இப்படித்தான் சிலவேளை களில், தமக்கு விடயம் விளங்கிவிட்டாலும் திரும்பத் திரும்பக் கேட்பார்கள். இங்கு பிள்ளயைார் கருணையின் நிமித்தம் கேட்டுக் கேட்டு உறுதி செய்தார். திருக்கடைக்காப்பில் பயன்கூறுமிடத்து

**"கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு**
**வாடன் மேனி அமணரை வாட்டிட**
**மாடக் காழிச்சம் பந்தன் மதித்தவிப்**
**பாடல் வல்லவர் பாக்கிய வாளரே"**

என்று பிள்ளையார் பாடினார். விடைகொண்டு மதித்த என்றால் விடைகேட்டு விண்ணப்பித்த என்று பொருள். எந்தை இறைவரே பொறுப்பை ஏற்றுக்கொண்டார். என்மேற் பழி இல்லை என்பது உறுதி. அதுபோல் இப்பதிகங்களை ஓதும் அடியவர்க்கும் ஒரு பழியும் சேரா. அவர்கள் புண்ணிய சீலர்கள் ஆவர். இப்படி ஆசிகூறிவைத்தார் பிள்ளையார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தம்முடைய பூலோகத் தாய்தந்தையரைக் குறித்துப் பாடியிருக்கிறாரா என்று பார்த்தால் இரண்டு பாடல்களில் தந்தையாரின் குறிப்பு இருக்கிறது.

திருநனிப்பள்ளி பதிகத்தின் கடைக்காப்பில்,
**"அத்தர் பியன்மேலிருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்"** என்று கூறுகிறார். அடுத்தது திருவாலவாய் மடத்திலிருந்து பாடிய திருக்கழுமலப் பதிகம். திருக்கழுமல இறைவரும் அம்மையும் கூடி அருளாட்சி செய்துகொண்டிருக்கிறார்கள் அல்லவா? அதனால் நன்றாய் வாழலாம். இப்படிப் பத்துப் பாடல்களிலும் பாடினார். தந்தையாரைக் கண்டதும் அகில உலகத் தந்தை தாயரை, தன் சிறப்பான தந்தை தாயரைக் கண்டார். இரண்டாவது பாடலில்,

**"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்**
**தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"**
என்று பெற்ற தந்தையாரைக் குறிக்கிறார். தந்தையார் கோபிக்க, இறைவர் என்னைப் பிள்ளயாக ஏற்றுக்கொண்டார் என்ற குறிப்பும் வருகிறது. ஆக, இந்த இரண்டு இடங்களிலும் பிள்ளையார் சிவபாதவிருதயரைக் குறித்திருக்கிறார். இங்கு சிவபாதவிருதயர் மகனை வீழ்ந்து வணங்கினார். இதேபோலப் பகவதி அம்மையாரும் மகனை வீழ்ந்து வணங்கியிருக்கிறார். பிள்ளையார் ஐந்தாவது யாத்திரை முடித்துக்கொண்டு சீர்காழித் திருப்பதித் தோணிபுரத்தை வணங்கி வீட்டுக்கு வந்ததும்,

**"முன்சென்று ஈன்ற தாயார் சாத்தி இறைஞ்சி"** என்று சேக்கிழார் அறிவிக்கிறார். இந்த அம்மையாரைப்பற்றிய குறிப்பு ஒன்றுந் தேவாரங்களில் இல்லை. காரணம், பிள்ளையார் இறைவனின் நினைப்பிலே மட்டும் ஒன்றியிருப்பவர். பெற்ற தாயையும் தந்தையையும் தோணியப்பராயும் உமையம்மையாயும் கண்டுகொண்டிருந்தார். அதுபோலச் சிவபாதவிருதயரும் பகவதியாரும் மகனைத் தோணியப்பராயும் உமாதேவியாராயும் கண்டுகொண்டிருந்தனர். **"பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்"** என்ற திருமூலர் திருமந்திரத்தோடு பார்க்கலாம்.

இனி, திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் சரித்திரத்தின் நிறைவுக் காலத்துக்கு வருகிறோம். திருமணப் பருவம் வந்ததும் பிள்ளையாரின் உறவினர்கள் மணம்பேசச் சம்மதம் கேட்டார்கள். பிள்ளையார் உலக இன்பங்கள் எதையும் அநுபவிக்கப் பிறவி எடுக்கவில்லை. தமக்கென எதுவும் இறைவரைக் கேட்டதுமில்லை. அவருடைய பக்குவநிலை அவருக்கு நன்றாய்த் தெரியுமல்லவா? விண்ணப்பத்துக்கு உடனே அவர் சம்மதிக்கவில்லை. பின்னர் உறவினர்கள் வைதீகப்பூசை ஓமம் முதலிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல் அந்தணர் கடமை, மேலும் இல்லற ஒழுக்கம் உலகில் நடைபெறவேண்டியதும் உலகியல் ஒழுங்கு. ஆதலால் இவற்றுக்கு வழிகாட்டியாகத் திருமணஞ்செய்தல் புண்ணிமாகும் என்று வாதிட்டார்கள். பிள்ளையார் சம்மதித்தார்.

திருமணப் பந்தரிலே மணமகளின் கையைப் பற்றியபடி எரிவலம் வரும் நேரம், பிள்ளையார் உணர்ந்தார்; தீர்மானித்தார். "இது நான் முத்தியடையச் சரியான நேரம். இந்த ஓமகுண்டத்தின் ஒளியைவிட எந்தை இறைவன் அல்லவா பெருஞ்சோதி? அங்கு விண்ணப்பஞ் செய்யலாம், வலம் வரலாம்" என்று கிரியை முடியுமுன் மனைவியைப் பற்றியபடியே மணப்பந்தரை விட்டு நல்லூர்ப் பெருமணம் கோயிலுட் புகுந்தார். அங்கு **"கல்லூர்ப் பெருமணம்"** என்று தொடங்கும் கருத்துள்ள திருப்பதிகம் பாடினார். "எந்தையாகிய இறைவனே நான் பூலோகத்துக்கு வந்த நோக்கம் நிறைவேறிவிட்டது என்று நம்புகிறேன். உலக இன்பங்களை நான் நாடியதில்லை. அதனால் உன்னிடம் கேட்டதுமில்லை. உன்னைப் பிரிந்து வெகுகாலம் ஓடிவிட்டது. இனி நான் ஊருக்கு வரவேண்டும், அருள்புரிவாய் எந்தையே" என்று வேண்டினார். தந்தையாகிய இறைவனுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. அருள் கூர்ந்தார். முத்தியளித்தார். பிள்ளையாருக்கு மட்டுமல்ல, மனைவிக்கும், திருமணத்துக்கு வந்திருந்தோர் எல்லோருக்கும், கோயில் வழிபாட்டுக்கு அந்தநேரம் வந்திருந்தோருக்கும் எந்தை இறைவனார் முத்தியளித்தார். மகனின் தொண்டுக்கும் கீழ்ப்படிவுக்கும் பரிசாக எல்லோருக்கும் முத்தியளித்தார். தந்தை மகற்காற்றும் நன்றியல்லவா இது?

அன்பர்களே, இக்கட்டுரையின் தலைப்புக்கேற்ற அளவில் கட்டுரையை முடித்திருக்கிறேன். விரிவாகப் பெரியபுராணத்தை உரையுடன் படியுங்கள். எனது கட்டுரைகளின் நோக்கமே திரு முறைகளை நீங்கள் படித்துப் பெரும்பேறு பெறவேண்டும் என்பதாகும்.

# மார்கழியில்......

திருமதி அரியமலர் உதயகுமார்

மார்கழி மாதம் என்றாலே அனைவருக்கும் ஞாபகம் வருவது மணிவாசகப்பெருமானும் அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகமும்தான். விரதங்கட்குள்ளே மிகவும் உன்னதமான விரதம் திருவெம்பாவை. ஏனெனில் சிவபெருமான் தனது திருவாயாலே "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று புறம் புறம் திரிகிறார். மணிவாசகரும் கோவை பாடியருளினார். 51 அதிகாரங்கள் கொண்டது திருவாசகம். ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு சிறப்பு வாய்ந்ததுவாயினும் இறைவனின் திருவாயால் சொன்ன, அதாவது கேட்ட திருவெம்பாவைக்கு தனிச்சிறப்புண்டு. நாலாம் திருமுறையில் அப்பர் பெருமான் **"இறப்பன் இறந்தால் இருவிசும்பேறுவன் ஏறிவந்து மறுபடியும் பிறப்பன்"** என்பார். ஐந்தாந் திருமுறையில் **"அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலவனைக் காணா என்னம்பாலிக்கும் மாறுகண்டின்புற இந்தப்பிறவி இன்னம் பாலிக்காதோ"** என்று ஏங்குவார்! ஆனால் திருவெம்பாவையில் பன்னிரண்டாவது பாசுரத்திலே மணிவாசகப்பெருமான் பிறவி துன்பம் என்பார்.

**ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத் தேதீயாடும்**
**கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்**
**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி**
**வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்**
**ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப**
**பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்**
**ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்!**

எமது பிறவித்துன்பத்தைத் தீர்ப்பவன் அல்லது பிறவித் துன்பத்தைத் தீர்க்கக்கூடிய தீர்த்தத்திற்கு உரியவன் தீர்த்தனாகிய இறைவன் நல்ல தில்லைச் சிற்றம்பலத்திலே தீ வளையத்துள் நின்று ஆடினாலும் ஆனந்தக்கூத்தன், மூவுலகங்களையும் படைத்தும் காத்தும் மறைத்தும் திரு விளையாடல்கள் செய்யும் இறைவன் என்னானன், என்னரையன், இன்னமுதன் என்றெல்லோமும் புகழ்ந்து பாடி, பூக்கள் நிறைந்த பொய்கையெல்லாம் உரித்துடையவனின் பொன்போன்ற பாதங்களை "சேவேறு சேவடி, தேனாற்கமலமே தேனூர்ந்து சேவடி, பொன்னங்கழல் என்றெல்லாம் ஏத்தி வண்டுகள் இரீங்காரமிடக்கூடிய கருங்குழல்களையுடைய பெண்களாகிய நீங்கள் வளையல்களும் சிலம்புகளும் ஆர்ப்பரிக்க இரு நீரோட்டமுள்ள சுனையிலே அதாவது ஓடும் அருவிகள் சங்கமிக்கும் குளத்திலே பாவையர்களே தீர்த்தமாடுவீர்களாக!" என்கிறார்.

தீர்த்தத் திருவிழாவின்போது எந்த ஆலயம் என்றாலும் பஞ்சபுராணம் அருளிப் பாடுக என்றாலே தேவாரம் பாடியபின், "ஆர்த்த பிறவித்துயர்கெட.."என்ற மேல்வரும் திருவாசகம் பாடினால் தீராதனவாகிய பிணிகள், வறுமை, பகை எல்லாம் தீர்ந்துவிடும். இலங்கையில் தம்பலகாமம் திருக்கோயிலில் அருள்பாலிக்கும் இறைவன் சிவபெருமான். அத்திருத்தலம் மிகவும் சக்தி வாய்ந்ததற்குக் காரணம், பஞ்சபுராணத்திற்குப் பதிலாகப் பன்னிரண்டு திருமுறைகளையும் ஓதுகின்றனர். புண்ணியம் பண்ணிய இறைவன் என்று சிவனடியார்கள் அங்கு கூறுவர். கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தத்தன்று சுனையில் அனைவரும் நீராடிப் பூசை காண்பர். இராமநாதன் கல்லூரியில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு ஆசிரியையின் பூசையின்போதும் மாணவிகள் திருவெம்பாவை இருபது பாடல்களையும் பாடி, "சித்தம் அழகியர் பாடாரோ நம்சிவனை.." என்ற மணிவாசகப்பெருமானின் ஆதங்கத்தை நிறைவேற்றுவர்.

# வடமொழியும் தென்மொழியும்

## சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்

சைவசமயம் மிக மிகத் தொன்மையானது. பல்வேறு திருமேனிகள் வழிபடப்படுவதால் இந்து என்ற பொதுப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்துவா? சைவமா? என்ற அடிபிடிகளை விட்டுவிட்டு இறைவன் அடியைப் பிடிப்பதை நாம் சிந்திக்கவேண்டும். பிள்ளையார், முருகன், சிவன், விஷ்ணு, சக்தி, ஐயப்பன், பைரவர் என வெவ்வேறு திருமூர்த்திகளின் விரதங்கள், வழிபாடுகள் பற்றிய செய்திகள் ஆகம, புராணப் பின்ன ணியாகவும் மரபு வழியாகவும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எல்லா ஆலயங்களிலும் எல்லா விதமான தெய்வமூர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. 'ஏகம் சத் விப்ராஹா பகுதா வதந்தி' என்று இருக்வேதம் கூறுகின்றது. இதன் பொருள் இறைவன் ஒருவனே, அறிஞர்கள் பலவாறு போற்றுகின்றனர் என்பதாகும். 'ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து' என்று அபிரா மியந்தாதி கூறும். 'அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்' எனக் கந்தபுராணம் சொல்கிறது. எனவே பலதெய்வ வழிபாடு உடையது எமது சமயம். பல ஞானிகள், ரிஷிகள், சித்தர்கள், யோகிகள், நாயன்மார்கள், சித்தாந்திகள் எனப்பல மகான்கள் எமது சமயத்தின் சிறப்பினை எடுத்துக்கூறியுள்ளனர். எமது சமயத்தில் பலமொழிகளில் அறிஞர்கள் அடியார்கள் இருந்துள்ளனர். ஆனால் எல்லாவிதமான அறிஞர்களும் ஞானிகளும் அடியார்களும் வடமொழியை ஏற்றுள்ளனர்.

சைவசமயம் அல்லது இந்துசமயம் எனும்போது வடமொழி மிக அவசியமான ஒன்றாகும். எமது சமய மூலங்கள் பல வடமொழியுடன் தொடர்புடையன. வடமொழி விளங்காத மொழி என்று நாம் சொல்லவிட முடியாது. இன்று வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், சிற்ப சாத்திரங்கள், யோக சாத்திரங்கள், நாட்டிய சாத்திரங்கள் யாவும் மூலநூலாக வட மொழியில் உள்ளன. ஆகமமுறைப்படி ஆலயம் கட்டுவது முதல் விக்கிரகங்களின் அளவுப் பிரமாணம், அத்திருமேனிகள் வைக்கப்பட்வேண்டிய இடம், யாகம் கட்டவேண்டிய முறை, குண்டங்களின் அளவுப் பிரமாணம், கும்பங்களுக்கு நூல்சுற்றும் முறை ஆகியவை தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியீடுகளாக வந்துள்ளன. அதனால் அவற்றைத் தமிழாகமம் எனக் கொள்ளல் ஆகாது. இவற்றைவிட, பல வடமொழிப் பெயர்கள் தமிழாக்கம் செய்யப்படுகின்றன. எனவே அது விளங்கக் கூடிய மொழிதான். உதாரணமாக, ஜெய என்பதை வெற்றி என்று மொழிபெயர்ப்புச் செய்கிறோம். இணைய தளங்களில் வடமொழி அல்லது சமஸ்கிருதம் சம்பந்தமான பல பக்கங்கள் உள்ளன. பல பல்கலைக் கழகத்திலும் பாடநூல்களாக உண்டு. மேலை நாட்டு அறிஞர் பலர் சமஸ்கிருத இலக்கண நூல்களை வெளியிட்டுள்ளனர். மக்டொனால்ட், பண்டக்கார், கீத் போன்ற வர்களை இங்கே குறிப்பிடலாம்.

தொல்காப்பியம் முதல் பல தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் சமயம் பற்றிய செய்திகள் வரும்போது அந்தணர், பார்ப்பனர், வடமொழி பற்றிய சொற்றொடர்கள் உள்ளன. திருமுறைகள் முதல் சைவசித்தாந்தம் வரையுள்ள நூல்களில் வடமொழிச் சொற்கள் இறையருளால் கலந்தே வந்துள்ளன. சைவசமயம் அல்லது இந்துமதத்தில் ஒவ்வொருவருக்கும் தமது தாய்மொழி அவ சியமாக இருக்கவேண்டும். அதேவேளை வழிபாடுகளில் சமஸ்கிருதம் இருப்பது இறைவனுடைய அருள்வாக்கு என்னும் உண்மையினால் ஆகும். சிவனை வழிபடும் மக்களில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, சிந்தி என பலமொழிகள் பேசும் மக்களும் உள்ளனர். இவற்றைவிட மொறீசியஸ், மலேசியா எனப் பல

நாட்டவர்களும் உண்டு. இவர்கள் எல்லோரும் பொதுவாக வழிபாட்டுக் காலங்களில் வடமொழி மந்திரங்களை விரும்புவர். காரணம், இறைவனால் அருளப்பட்டது என்ற உண்மையை உணர்ந்து மந்திரங்களில் நம்பிக்கையை உடையவர்களாக அவர்கள் இருப்பதே. அவர்களிற் பலர் திரியம்பகம் யஜாமஹே என்னும் மந்திரத்தையும், காயத்திரி மந்திரத்தையும், ஓம் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தையும் சொல்லும் அன்பர்களாக விளங்குகின்றனர். இதனால் சமஸ்கிருத பரப்பு, வழிபாட்டில் அதிகம் என்பதை உணரலாம். எனவே வடமொழிமேல் வெறுப்போ, மறுப்போ இருக்கக்கூடாது. வடமொழியும் ஓர் உறுப்பாக சமயவழிபாட்டில் இடம்பெற பொறுப்பாக அனைவரும் இருக்கவேண்டும். நமசிவாய என்பதை சில தமிழ் அறிஞர்கள் சமஸ்கிருத இலக்கண அறிவின்மையால் நம் + சிவ + ஆயம் என்று சிவமூல மந்திரத்தையே தாறுமாறாகப் பிரிக்கின்றனர். சிவ என்ற பெயர்ச்சொல் தமிழில் இல்லை. சிவன் என்று வரும். அப்படி வந்தால் சிவன் + ஆயம் சிவனாயம் என்றுதான் வரும். நம் + சிவம் நமசிவம் என்று வராது. எனவே தமிழ் இலக்கணத்துக்கும் ஒத்துவராத பிரிப்புக்கள் வேண்டாம். வடமொழி இலக்கணத்தின்படி சிவாய என்பது நான்காம் வேற்றுமை உருபு. அதாவது சிவனுக்கு என்ற பொருளில் வரும். இவற்றை விட ஸ்தூல பஞ்சாட்சரம் சூட்சுமபஞ்சாட்சரம் பற்றிய விளக்கங்கள் சைவ சித்தாந்தத்தில் உண்டு. இதேபோலவே நாராயணாய என வைஷ்ணவர்களும் சரவணபவாய என்று முருக பத்தர்களும் மூலமந்திங்களைச் சொல்கிறார்கள். இன்னும் நாராயணாய, சரவணபவாய என்ற மந்திரங்களை எப்படிப் பிரிக்கப்போகிறார்களோ தெரியவில்லை.

சமஸ்கிருத சொற்களில் பல 'ல', 'ர' என்ற எழுத்துடன் தொடங்கும். உதாரணம்: ரம்மியம், ரத்தம், ரணம், ராஜன், ராமன் என்று பல. லாவண்யம், லலிதா, லாபம், லிங்கம், லகு போன்ற சொற்களும் இவ்வாறு தமிழிலே தொடங்காது என்பதால் முன்னால் இ என்னும் எழுத்தைச் சேர்த்து, இரம்மியம், இராமன், இலாபம், இலகு, இலிங்கம் என்று சொல்லும் ஒற்றுமை மரபைப் பார்க்கலாம். வழிபாடு என்று வரும்போது சமஸ்கிருதம் அவசியம் வந்தே சேரும். பாவம், புண்ணியம், தீபம், ஞானம் போன்ற சொற்கள் அதிகம் வரும் வடமொழிச் சொற்கள் ஆகும்.

நாதன், நாமம் போன்ற சொற்களும் பலமுறை பயன்படுத்தப்படும். நாதன் என்றால் தலைவன். இதற்கு எதிர்ச்சொல் ந + நாதன் = அநாதன் என்று வரும். அநாதன் என்றால் தலைவன் இல்லாதவன் என்று பொருள். இவ்வாறு ந என்னும் சொல்லை முன்னுக்கு வைக்கும் இலக்கண மரபு வடமொழியிலே உண்டு. அவ்வாறு வைக்கும்போது எதிர்ச்சொல் வரும். உதாரணம்: நீதி அநீதி, ஞானம் அஞ்ஞானம், நியாயம் அநியாயம், ஏகன் அநேகன், அந்தம் அநந்தம், ஆதி அநாதி, சைவம் அசைவம் (ஈங்கு சைவம் என்ற சொல்லும் சமஸ்கிருதம். எனவேதான் ந + சைவம் = அசைவம்) காலம் அகாலம். காலம் என்பது சமஸ்கிருதம். அடுத்து வி என்ற எழுத்து வரும்போது மிக மேன்மையைக் குறிக்கும். ஞானம் - அறிவு, விஞ்ஞானம் மேலான அறிவு, சுத்தம் - தூய்மை, விசுத்தம் - மிகத்தூய்மை. சில இடங்களில் எதிர்ச்சொலலாகவும் வரும். மலம் - விமலம், நாயகன் - விநாயகன் இவ்வாறு பல இலக்கண விதிகளின்படி வடமொழி இன்றும் உலாவுகிறது. அதனை இறந்த மொழி என்று சொல்வதைவிடப் பேச்சுவழக்கில் இல்லா விட்டாலும் இன்றும் சைவ நூல்களில் சிறந்த மொழியாகவே இருக்கிறதென்று மனந்திறந்து நாம் போற்றவேண்டும். வடமொழியின் சிறப்பை தற்சமம், தற்பவம் என்ற விதிமுறையில் தொல்காப்பியம் தொடர்புபடுத்துகிறது. 'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்று அனைத்தே செய்யுள் ஈட்டச்சொல்லே' என்று வடமொழி மேன்மையைக் கூறுகிறது. வடமொழிச் சொற்கள் தமிழில் அப்படியே வருவது தற்சமம் உதாரணம் பாதாரவிந்தம், கமலம், நியதி, காரணம் இவ்வாறு பல சொற்கள் உண்டு. தற்பவம் என்பது வடமொழிச் சொற்களுக்குப் பதிலாக தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்.

ஈஸ்வரன் - ஈச்சரன், கேதீஸ்வரம் - கேதீச்சரம், ஜனம் - சனம், லக்ஷ்மி - இலட்சுமி - இவ்வாறு பலவுண்டு. தமிழுக்கு தொல்காப்பியம் போல வடமொழிக்கு பாணினியின் சூத்திரம் என்பார்கள். நம்மிற் சிலர்,

**'கண்ணுதற் கடவுளும் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'**

என்ற வரிகளை மாத்திரம் சொல்கிறோம். அதே பரஞ்சோதி முனிவர் அதே திருவிளையாடற் புராணத்தில் பாடியுள்ள,

**'வடமொழியைப் பாணினிக்கு வகுத்துத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார்'**

என்ற வரியை நாம் மறைக்கக் கூடாது. வடமொழிக்கும் தென்மொழிக்கும் இருக்கும் தொடர்பு இறையருளால் வந்தது என்ப தாலேதான் தொடர்புடைய தென்மொழி என்கிறார்.

**'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே'**

என்ற திருமூலர் வாக்கை நாம் போற்றுகிறோம். அதே திருமூலரின்,

**'தமிழ்ச் சொல் வடசொல்லெனும் இரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே'** என்ற வரிகளை ஏன் நாம் வெளிப்படுத்த விரும்புவதில்லை?

**'அடுத்துத் தொடுக்கும் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே'** என்ற குமரகுருபர சுவாமிகளின் பாடலைப் படிக்கிறோம். இன்னுமோரிடத்தில் குமரகுருபர சுவாமிகள், 'வடகலை தென்கலை பயிலுமலை' என மீனாட்சியம்மை குறத்தில் பாடுகிறார். சகல கலாவல்லி மாலையில் தூக்கும் பனுவற்று றைதோய்ந்த கல்வியும் எனும் பாடலில் **'வாக்கும் பெருகத் தருவாய் வடநூற் கடலும் தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்'** என்கிறார்.அதாவது வடநூல் கடல் என்கிறார். தமிழ் ஒளிபெறவேண்டும். அதிலே சந்தேக மில்லை. ஆனால் எமது வழிபாட்டுக்கு உரிய சமஸ்கிருதத்தை இருட்டடிப்பு செய்யக்கூடாது. அதனை நாம் மதிக்க வேண்டும். மிதிக்கக் கூடாது. தமிழர்களாகிய நாம் தமிழ் வளர்ப்பதில் ஆர்வம் காட்டவேண்டும். இறைவனுக்கு எல்லா மொழியும் விளங்கும். ஆனாலும் இறைவனால் அருளப்பட்ட ஆரியம் அல்லது வடமொழியைப் பழிப்பதோ அழிப்பதோ இழித்துரைப்பதோ இறைவனை அவமதிக்கும் செயல் என்ற பயம் உண்மையான சைவ அன்பர்களுக்கு இருந்து வருகிறது. ஒருசிலர் இறைவனால் அருளப்பட்ட சமஸ்கிருத மொழியை வெறுப்பதிலும் மறுப்பதிலும் காலத்தைக் கழிக்கின்றனர். அப்பாவம் அவர்களைச் சாரும். தேவ காரியங்களில் பயன்படுவதால் வடமொழியைத் தேவபாஷை என்றும் சொல்வர். 'திவ்' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தேவன், தைவ என்ற சொல் வரும் அதாவது திவ் என்றால் ஒளிபொருந்திய புனிதமான என்ற கருத்தில் வரும். தைவ என்பதுதான் தெய்வம் என்று வந்தது. சங்க நூல்களில் அந்தணர், மந்திரம், வேதம், வேள்வி, பார்ப்பனர் பற்றிய செய்திகள் இருப்பதன்மூலம் வழிபாட்டில் இவை இருந்துள்ளன என்பதை நாம் அறியலாம். **'மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி'** எனத் திருமுருகாற்றுப்படையிலும், **'மூன்றுவகை குறித்த முத்தீச் செல்வத்து இருபிறப்பாளர்'** எனப் பதிற்றுப்பத்திலும் கூறப்பட்டுள்ளன. சிறந்த செந்தண்மை கொண்டவர்கள் அந்தணர்கள். அது பொது வாகக் கூறப்படினும் குறிப்பாக முப்புரிநூல் தரித்து அறுவகைக் கடமைகள் செய்ப வர்களைக் காட்டுகிறது. இதனை ஓதல், வேட்டல், அவை பிறர்ச்செய்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறுபுரிந்து ஒழுகும் அறம்புரி அந்தணரெனப் பரிபாடல் கூறுகிறது. அமரர் வேள்விப்பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான் என முழுமுதற் கடவுளைக் குறிப்பிடுகிறது. **'அந்தணராவோர் அறுதொழில் பூண்டுள்ளோர் செந்தழல் ஓம்பி'** எனத் திருமூலர் கூறுவதும் காயத்திரியே கருது சாவித்திரி ஆய்வதற் குவப்பா மந்திரமாம் எனக்கூறுவதும் வடமொழி மரபேயாகும். அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம் என அப்பர் சுவாமிகள் அருளிய தையும் காணலாம்.

பார்ப்பான், அந்தணர், அறுதொழில், வேள்வி

பற்றிய செய்திகள் திருக்குறளிலும் உண்டு. அத்துடன் ஆதி, பகவன், பூதம், நாகம், இந்திரன் போன்ற வடமொழிச் சொற்களையும் வள்ளுவர் கையாண்டுள்ளார். நாயன்மார்கள், அருளாளர்கள், சைவசித்தாந்திகள் வட மொழியை இறைவனின் முத்திரையாகப் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் இறைவனின் அருளால் அற்புதங்கள் செய்தார்கள். பூசை செய்யவில்லை. அவர்களது அற்புத சத்தியைப் போற்றுவோம். வடமொழிப் புராணக்கதை பல திருமுறைகளில் காட்டப்படுவதன்மூலம் இறையருளால் வடமொழியின் அவசியத்தைப் புரிந்துகொள்ளலாம். எனவே திருமுறைகளில் வரும் வடமொழியை நாம் தமிழாக்கம் செய்யமுடியாது. விளங்கிக்கொள்ளலாம். ஆகவே திருமுறைகளில் நாயன்மார்களே சமஸ்கிருதத்தை ஏற்றுள்ளார்கள் என்றால் நாமும் போற்றவேண்டும்; மாற்றக்கூடாது, தூற்றக்கூடாது.

திருமுறைகளை தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள், **'வகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே'** என்று இரு மொழிக்கும் இருக்கும் இணைப்பைச் சொல்கிறார். வடமொழி தென்மொழியெனவே வந்த இரு விழியெனப் பிற்காலத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மனியம் என்னும் நூலில் கூறியுள்ளமை காண்க. திருமுறைகளில் பல இடங்களில் வரும் வடமொழிப் புராணக்கதைகளை மொழிவெறுப்பின் காரணமாக நாம் விடமுடியாதல்லவா? அப்படி வெறுப்படைந்தால் நாம் திருமுறை படிக்க முடியாதல்லவா? உதாரணமாக,

**'அந்தணாளனுன் அடைக்கலம் புகுத**
**அவனைக் காப்பது காரணமாக**
**வந்த காலன்றன் ஆருயிரதனை வவ்வினாய்'**

என்ற வரியில் மார்க்கண்டேயருக்காக காலனைக் காலால் எம்பெருமான் உதைத்த வடமாழிப் புராண வரலாறு கூறப்படுகிறது. மகாபாரதத்தில் அருச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்த வரலாற்றை அப்பர் சுவாமிகள் வேடனாய் விசயன் தன் வியப்பைக் காண்பான் என்றும் அர்ச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்தானை என்றும் பாடுகிறார். பார்கவ் புராணத்தில் கூறும் கயமுக சங்காரம் பற்றியும் அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

**'கைவேழ முகத்னைப் படைத்தார் போலும் கயாசுரனை அவரால் கொல்வித்தார்போலும்'** எனப் பாடுகிறார். அடிமுடி தேடிய வரலாறு நஞ்சுண்ட வரலாறு கூறாத நாயன்மார்களே இல்லை. இவை சமஸ்கிருத நூல் கதைகள். இவற்றை ஏற்கி றோம் படிக்கிறோம் என்றால் சமஸ்கிருதம் ஏற்கிறோம் என்றுதான் பொருள். ஆலந்தான் உகந்து அமுது செய்தானை எனவும், மால றியா நான்முகனும் காணா மலையினை என்றெல்லாம் திருமுறைகளை ஓதிக்கொண்டு வடமொழியை ஊதிவிடலாமா?

திருமுறைகள் அருளியவர்கள் நாயன்மார்கள் போல் வடமொழி நூல்களை அருளியவர்கள் ரிஷிகள் முனிவர்கள் பலர் இருந்துள்ளனர். இருக்கு வேதத்தில் சுமார் 450 கவிஞர்கள் பாடியுள்ளனர். திருமுறைகள் அருட்பாடல்கள் தொகை ஏறத்தாழ 50000 என்றால் வேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள் இதிகாசங்கள் என்பவற்றின் தொகை சுமார் 5 லட்சம் பாடல்கள். இவற்றைவிட, திருமுறைகளில் உள்ள வடமொழிச் சொற்கள் ஏராளம். இவ்வாறு இருக்கும் வடமொழி மரபு இறை வனுடையது. இதனைத் தாக்கவோ தூக்கவோ முடியாது. அப்படி நாம் செய்தால் சிவன் வாக்கை அவமதிக்கிறோம் என்றுதானே கொள்ளவேண்டும்.

அந்தாதி என்கிறோம். இது வடமொழி. காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடினார். பின்பு அபிராமபட்டர் அபிராமி அந்தாதி அருளினார். இப்பாடல்களில் எவ்வளவோ வடமொழிச் சொற்கள், புராணச் செய்திகள் உண்டு. எல்லவற்றுக்கும் மேலாக முருகப்பெருமான் பற்றிப் பாடும் அருணகிரி நாதர் சமஸ்கிருத சொற்களையே அதிகம் பயன்படுத்தியுள்ளார். ஏனெனில் இறைவனது வசனம் இல்லாமல் எதுவும் செல்லுபடியாகாது. முத்தைத்தரு பத்தி திருநகை என்னும் திருப்புகழிலே தொடங்கி அத்தனை திருப்புகழிலும் பல வடமொழிச்சொற்கள். கந்தரனுபூதி, கந்தரலங்காரம், மயில்விருத்தம்,

வேல்விருத்தம் அனைத்திலும் சமஸ்கிருதம் பாய்ந்து ஓடுகிறது.

வடமொழி ஸ்கந்தபுராணத்தின் அடிப்படையில் சூரன்போர் செய்கிறோம். வடமொழியோடு போர் செய்யலாமா?

ஆலய வழிபாடுகளிலும் பாரம்பரிய சைவர்களான குலத்தில் வேதசிவாகமங்களைக் கற்று முறைப்படி உபநயனம் மூன்று தீட்சை ஆகியவை செய்தவர்களை உலக நன்மையின் பொருட்டுப் பரார்த்த பூசை செய்யவேண்டும், சிவாசாரியர்களைக் கொண்டு பிரதிஷ்டை உற்சவம் செய்யவேண்டும் என்ற விதிமுறை களைச் சிவாகமங்கள் வலியுறுத்துகின்றன. ஆதிசைவ குலோத்பவா என்பது கவனிக்கத் தக்கது. சைவப் பெரியோர்கள் இதனைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு பொது வழிபாட்டில் ஈடுபடுகின்றவர்கள் ஆதிசைவர் எனப்படுவார்கள். இவர்கள் தாம் மாத்திரமன்றி, தமது குடும்பம் உறவினர்கள் எல்லோரும் பாரம்பரிய சைவ உணவு உண்பவர்களாக விளங்குவார்கள். திருவிளையாடற் புராணத்தில் **'ஆதி சைவனாம் அருச்சகன் ஒருவனே'** எனவும் பெரியபுராணத்தில் **'வழிவழியே திருத் தொண்டின் விரும்பிய வர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன'** என்றும் வருகின்றன. ஆரியம், வடமொழி என்பது சைவசமயத்தின் உயிர்நாடி. எனவே ஆரியம் என்பது உயர்ந்த என்னும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. **'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே', 'ஆரியன் முன்னிலையில் அற்றன மலங்களே', 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்', 'வடமொழியும் தென்மொழியும் மறைநான்கும் ஆனவன்'** போன்ற பல திருமுறை வரிகள் வடமொழிச் செல்வாக்கை எடுத்துச் சொல்கின்றன. எனவே வடமொழியை ஆலய வழிபாடுகளிலே பயன்படுத்தாமற் புதைப்பதோ அன்றி சிதைப்பதோ சைவ அன்பர்கள் செய்யக்கூடிய காரியம் அல்ல என்பதை மட்டும் புரிந்து தெளிவடைவோம். முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான் என்று பாடிய அருணகிரிநாதர் சரணப் பிரதாப சசி தேவி மாங்கல்ய தந்து ரக்ஷா பிரணக்ருபாகர ஞானாசுரசுர பாஸ்கரனே என்றும் வடமொழி அடுக்கை தனது அருட்பிரபந்தங்களிற் பாடி வடமொழி மந்திர வாக்கை உரிமைப் படுத்தியதை நாம் பெருமைப்படுத்தவேண்டும். சம்பந்தப் பெருமானை **'வளமலி தமிழிசை வடகலை மறைவல'** என ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் கூறுகிறது. தமிழ் விரகர் சம்பந்தப்பெருமான் உபநயனம் வேதமந்திரங்களோடு சிறப்பாக நடைபெற்றதை பெரியபுராணம் புகழும். உபநயன முறைமையாகும். இருபிறப்பின் நிலைமை யினைச் சடங்குகாட்டி எனவும் பொருவிறப்ப ஓதினார் புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த புனிதவேதம் எனவும் காட்டுவதால் இரு பிறப்பார் என்பது உபநயனம் பெற்ற அந்தணர்களைக் குறிப்பதை உணரலாம். அத்துடன் இவ்வாறு பலநூல்களும் நாம் போற்றும் ஞானிகளும் முனிவர்களும் நாயன்மார்களும் ஆன்றோர்கள் போன்ற பலரும் ஆலய வழிபாடு என்று வரும்போது அல்லது இறைபிரார்த்தனைகளிலும் வடமொழி என்பது ஒதுக்கவோ பதுக்கவோ முடியாத புனித நூல் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து மாற்று மதங்கள் வழியிலே புகுந்துவிடாமல் மரபுவழி காப்போம்.

இருமொழியும் இறைவன் மொழியே இரண்டையும் போற்றுவது எமது வழியே!

சந்துசேனனு மிந்துசேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
**மந்திபோற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பய னறிகிலா**
அந்தகர்க்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே

***திருமுறை 3 பதிகம் 39 பாடல் 4 திருஞானசம்பந்தர்***

# திருநீலநக்க நாயனர்

காவிரி வள நாட்டில் சாத்தமங்கை என்னும் ஓர் அழகான ஊர் உண்டு. அது மங்கள மறையவர் நிறைந்திருக்கும் மூதூர். அங்கும் குளங்களில் மங்கையர் நீராடும்போது அவர்களோடு அன்னங்களும் சேர்ந்து விளையாடும், வேத பாடசாலையில் மறையோர் வேதம் பயிலும் போது நாகணவாய்ப் பறவைகளும் கலந்து சாமவேதம் பாடும். பிறவிக் கடலை நீந்து வதற்காக அந்தணர்கள் முத்தீ வளர்க்கும்போது மங்கையர் தங்கள் கற்புத் தீயையும் சேர்த்து வளர்ப்பார்கள். நான்மறைப் பொருளை விளக்கும் நல்லோர் நிறைந்த அந்த ஊரில், அந்தணர் குலத்தில் திருநீலநக்கர் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆலம் உண்ட சிவ பெருமானுக்கு அவர் அன்புள்ள தொண்டர். “சிவபெருமானையும் சிவனடியார்களையும் விரும்பி வணங்கிப் பாத அருச்சனை புரிவதே வேதத்தின் உட்பொருளாகும்!” என்ற கொள்கையுள்ளவர். திருநீலநக்கர் அக் கொள்கைப்படியே பெரு விருப்போடு நாள் தோறும் தவறாமல் சிவாகம விதிப்படியே சிவ பெருமானைப் பூசித்துச் சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்தல் முதலான திருப்பணி களையெல்லாம் செய்து வந்தார்.

ஒருநாள், திருவாதிரையன்று தீருநீலநக்கர் சிவபூசைகளை முடித்துக்கொண்டு, அயவந்தி என்னும் அவ்வூர்க் கோவிலிலுள்ள சிவ பெருமானையும் அருச்சிக்க விரும்பித் தம் வீட்டிலிருந்து புறப்பட்டார். வழிபாட்டிற்குரிய பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர் தம் மனைவியாருடன் சென்று ஒருமை யுணர்வுடன் ஆலயத்தை அடைந்தார். அங்கு அவர் ஈசுவரனின் திருவடிகளை வணங்கிப் பூசை செய்யத் தொடங்கினார். அருகில் அவருடைய மனைவி நின்று அவருக்கு வேண்டுவனவெல்லாம் எடுத்துக் கொடுக்க, அவர் உணர்ச்சி மிகுதியோடு அருச்சனை செய்தார். பூசை முடிந்தது. ஆயினும் அன்பினால் அவர் மனம் நிறையவில்லை. அதனால், சிவபெருமான் உட்பிரகாரத்தை வலம் வந்து பணிந்து எழுந்து இறைவன் திருமுன்பு இருந்து கொண்டு சிவபெருமாதைத் தெளிவுற நோக்கியபடி மெய்மறந்து திருவந்தெழுத்தைச் செபித்துக் கோண்டே இருந்தார்.

அப்பொழுது சுதைச் சிலந்தி ஒன்று தான் நின்ற நிலையினின்றும் வழுவிச் சிவலிங்கத் திருமேனியின்மீது விழுந்தது. அதை அருகில் நின்ற நீலநக்கரின் மனைவியார் கண்டார். உடனே அந்த அம்மையார் அச்சத்தோடு விரைந்து சென்று ஒரு பச்சிளங் குழந்தையின் மீது சிலந்தி விழுந்தால் அதை விஷம் சிந்தாதவாறு நீக்குவதற்காக ஒரு தாய் எப்படித் தன் வாயால் ஊதி உமிழ்வாளோ, அது போலவே சிவலிங்கத் திருமேனியின்மீது விழுந்திருக்கும் சிலந்தியை அன்போடு அந்த அம்மையாரும் தன் வாயால் ஊதினார்; உமிழ்ந்தார். அப்போது அவர் வாயிலிருந்த உமிழ்நீரும் சிவலிங்கத்தின்மீது பட்டது. அதைக் கண்ட திருநீலநக்கர், “அறிவற்றவளே! இச்செயலை நீ ஏன் செய்தாய்?”என்று கேட்டார். அதற்கு மனைவியோ, “சிலந்தி ஒன்று சிவலிங்கத்தின்மேல் விழுந்ததால் அதை நான் ஊதிப்போக்கினேன்” என்று கூறினார்.

சிவலிங்கத்தின் மீதுள்ள அன்பினாலேயே தம் மனைவி அப்படிச் செய்ததாகத் திருநீலநக்கர் தம் மனதில் அதைக் கொள்ளவில்லை. தாம் செய்த பூசையில் இவ்வாறு தம் மனைவி யாலேயே அநுசிதம் நிகழ்ந்துவிட்டதாகத்தான் அவர் கருதினார். அதனால் அவர் தம் மனை வியை நீக்கிவிடவும் நினைத்தார். தம் மனை வியைப் பார்த்து, “இறைவன் திருமேனியில் விழுந்த சிலந்தியை நீ வேறுவகையால் நீக்கியிருக்கலாம்! அவ்வாறு நீ செய்யத்தவறி உன் உமிழ்நீர் எச்சில் படும்படி உன் வாயால் அநுசிதம் புரிந்த உன்னை இங்கே இக்கணம் முதல் நான் துறந்தேன்! என்னை விட்டுப்போ!”என்று சினந்து கூறினார்.

அப்போது சூரியன் மேலைத் திசையில் மறைந்தான். அந்தி இருட்டுப்பொழுதும் வந்தது. நீலநக்கரின் கட்டளைப்படி மனைவியார் ஒரு வழியாக நீங்கிச் சென்றார். நாயனார் பழி தீரும்படி பூசையை முடித்துவிட்டுத் தம் வீட்டிற்குத் திரும்பி வந்து சேர்ந்தார். ஆனால் அவருடைய மனைவியாரோ, அஞ்சிய உள்ளத்தோடு தம் வீட்டிற்கு வரமுடியாமல் திருக்கோயிலிலேயே அன்றிரவு முழவதும் தங்கி இருக்கலானார்.

அன்றிரவு, வேதியர் திருநீலநக்கர் தம் வீட்டில் பஞ்சின் மெல்லணையில் படுத்துறங்கும்போது, அடியவர்க்கு எளியவராகிய அயவந்திநாதர், திருநீலநக்கனாரின் கனவிலே விரிசடையோடு தோன்றி நின்று, தனது திருமேனியைக் காட்டி "உன் மனைவி உள்ளன்போடு எனை ஊதி உமிழ்ந்த இடம் தவிர, பிற இடங்களிலெல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் கிளம்பியுள்ளன" அவற்றைப் பார்!" என்று கூறியருளினார்.
நாயனார் தான் கண்ட பெருங்கனவை நனவாகவே கருதி அச்சத்தோடு அஞ்சலி குவித்து உடனே கண்விழித்து எழந்தார். எழுந்ததும் இறைவனைத் தொழுதார். ஆடினார், பாடினார், துதித்தார். சிவ பெருமானின் பெருங்கருணையைத் திறத்தைப் போற்றி நின்று, கண்ணீர் சிந்தி அழுதார். இராக்காலம் கழிந்து புலர்ந்தவுடன் அவர் கோயிலுக்குச் சென்று இறைவனைப் பணிந்து கும்பிட்டெழுந்து தம் மனைவியாரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு வீடு திரும்பி தம் இல்லம் வந்து சேர்ந்தார். பிறகு அவர் முன்னைவிடப் பெரும் மகிழ்ச்சியோடு சிவ பெருமானுக்கு எல்லையில்லாத பூசைகள் செய்தும் சிவனடியார்களுக்கு முன்புபோலவே வேண்டுவனவற்றையெல்லாம் விருப்பத்தோடு அளித்தும் இல்லறத்தில் இனிதமர்ந்து வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு திருநீலநக்க நாயனார் திருத்தொண்டு புரிந்து இனிமையாக வாழ்ந்து வரும் காலத்தில், சீரகாழியிலே பிறந்த ஞானசம்பந்தரின் பெருமைகளைச் சொல்லிப் பலவாறும் உலகத்தார் போற்றியதைக் கேள்விப்பட்டு, ஞானப்பால் உண்ட அப் பிள்ளையாரைக் கண்டு வணங்கப் பேராவல் கொண்டார். அச்சமயத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் அவர் மனைவியான மதங்க சூளாமணியும் உடன் வர, சிவனடியார் பெருங்கூட்டத்துடன், திருஞான சம்பந்தர் பல சிவத்தலங்களையும் தரிசித்துத் தொழுது கொண்டு சாந்தமங்கை ஊர் அருகில் வந்தார். அதையறிந்த திருநீலநக்கனார் பெரிதும் மகிழ்ந்தார். உடனே அவர் மலர்மாலைகளும் கொடிகளும் கட்டித் தோரணங்களும் நாட்டி நீண்ட தூரத்திற்கு நடைப்பந்தர் வேய்ந்தார். பிறகு அவர் உற்றார் உறவினரோடு கூட்டமாகச் சென்று, திருஞானசம்பந்தரைத் திருக் கூட்டத்துன் சிறப்பாக எதிர்கொண்டு அதிலேயே ஆடியும் மனம் ஒன்றிப் பாடியும் பலவாறாகவும் தொழுதெழுந்து வரவேற்றுத் தனது திருமனைக்கு அவர்களையெல்லாம் அழைத்து வந்தார். திருஞானசம்பந்தரின் பெருமைக் கேற்பச் சிவனடியார்கள் பெரும் வெள்ளமாகத் திரண்டு வந்தார்கள். அவ்வடியார்களுக்கும் திருஞானசம்பந்தருக்கும் திருநீலநக்கர் பேருவகை பொங்கத் தம் இல்லத்தில் திருவமுது செய்வித்தார். பகற் சூரியன் மேற்கடலில் போய் மறைந்தது. குமுதத் தடாகத்தில் குளிர் நிலாப் பொங்கி எழுந்தது.

அன்றிரவும் திருஞானசம்பந்தர் அவர் இல்லத்தில் தங்கி விருந்துண்டார். எல்லோரும் அமுதுண்ட பின்னர்த் திருஞானசம்பந்தர் அழைத்ததில் திருநீலநக்கர் விரைந்து வந்து வணங்கி நின்றார். அவரை நோக்கி, ஞானசம்பந்தர் "நம் திருநீலகண்டப் பெரும்பாணர் இன்றிரவு இங்கு தங்குவதற்கு ஓர் இடம் கொடுத்தருளும்" என்றார். ஒரு வேளை திருநீலநக்கர் அந்தணராதலின் திருநீலகண்ட யாழ்ப்பாணரிடம் தீண்டாமை பாராட்டுவாரோ என்று ஞானசம்பந்தர் நினைத்தார் போலும்!. ஆனால் திருநீலநக்கனாரோ பெருமகிழ்வெய்தி தம் நடுமனையில் வேதிகையின் பூசை மேடையின் பக்கத்தில் யாழ்ப்பாணருக்கு இடமளித்தார். அங்கே ஓமகுண்டத்திலுள்ள நித்தியாக்கினி முன்னைவிட அதிகமாக எழுந்து ஓங்கி நாவிட்டு

சுழன்று அதிபிரகாசமாய் எரியலாயிற்று. திருநீலநக்கநாயனார் மகிழ்வுற்றார். பெரும் பாணர் தம் துணைவியாருடன் அங்குப் பள்ளி கொண்டார்.

திருஞானசம்பந்தர் அன்றிரவு திருநீலநக்கனாரின் வீட்டில் படுத்துறங்கி மறுநாள் எழுந்ததும் அங்கிருந்த புறப்பட்டு அயவந்தி நாதரை வணங்கிப் போற்றும்போது திருநீலநக்கனாரின் பெருமையையும் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். பிறைசூடிப் பெருமானின் திருவடி களை அவர் போற்றிப் புதிய செந்தமிழில் பழைய மறையைப் பொழிந்துவிட்டு திருநீல நக்கநாயனார்க்கும் அதிக நட்பினை நல்கிவிட்டு மேலும் பல சிவதலங்களைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார். திருஞான சம்பந்தரைப் பிரிந்திருக்கத் திருநீலநக்நாயனாருக்கு மனம் இல்லை. உள்ளன்பும் நட்பும் அவரை உந்தித் தள்ளின. ஆயினும் சுவாமிகளின் கட்டளையை மீறமுடியாமல் சாத்தமங்கை ஊரிலேயே திருநீலநக்கர் தங்கியிருந்தார். அவரது மனம் மட்டும் திருஞான சம்பந்த சுவாமிகளிடமே போய் லயித்திருந்தது. சிலநாள் கழித்து இடையிடையே நாயனார் நட்பின் பெருக் கோடு திருஞானசம்பந்தர் போகும் திருத் தலங்களுக்கு தாமும் போய் அவரைக் கண்டு தொழுது அவரோடு பழகிவிட்டுத் திரும்பி வருவார்.

பின்னர் திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த திருஞானசம்பந்தரின் திருக்கல்யாணத்தில் திருமணத்திறத்தை தாமே செய்வித்துத் திருநீலநக்கநாயனார் சிவபெருமானின் திரு வடிநிழலை அடைந்து பேரின்ப நிலை பெற்றார்.

**"ஒலிபுனல் சூழ்சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்"**

-சுந்தரர்

## துவேஷத்தில் செய்கிற காரியங்கள்



சமீபத்தில் "மனிதநேயம்" என்று ஒரு வார்த்தை உலாத்துகிறதாகப் பார்க்கிறேன். நல்ல வார்த்தைதான். காதுக்குக் கேட்கவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் "மனிதாபிமானம்" என்று இத்தனை நாளாய்ச் சொல்லிவந்ததில் "அபிமானம்" என்ற சமஸ்கிருத வார்த்தை இருப்பது பிடிக்காமல்தான் இப்படி மாற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும் போது பரிகாசமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் 'நேயம்' என்பதும் சமஸ்கிருதத்திலிருந்து வந்த 'ஸ்நேஹம்' என்பதன் திரிபுதான். சமஸ்கிருதம் இலக்கணசுத்தமான பாஷை. அதையே பேச்சுக் கொச்சையாக இருக்கும்போது பிராகிருதம் என்பார்கள். அந்தப் பிராகிருத பாஷையில்தான் சமஸ்கிருத நாடகங்களில் சம்பாஷிப்பார்கள். அதிலே 'ஸ்நேகம்' என்பதும் 'நேயம்' என்றுதான் வரும். அது போகட்டும். மனிதநேயம் என்பதிலும் முதலில் மனித என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே அதுவும் 'மநுஷ்ய' என்பதன் திரிபுதானே! இதேமாதிரித்தான் 'நீதிபதி' என்பதிலும் 'நீதி' என்ற சமஸ்கிருத வார்த்தையை அப்படியே வைத்துக்கொண்டு 'பதி' மட்டுந்தான் சமஸ்கிருதம் என்று நினைத்து விரட்டிவிட்டு 'நீதியரசர்' என்று போடுவதாகத் தெரிகிறது. இந்த 'அரச' என்பதும், இன்னும் 'அரைய', 'இராய' என்கிறதெல்லாமுங்கூட 'ராஜ' என்ற சமஸ்கிருத வார்த்தையின் திரிபுகள்தான். 'மன்னன்', 'கோ' என்கிறவைதான் ராஜாவுக்கான சுத்தத் தமிழ்வார்த்தைகள்.. ஒருத்தருக்கும் ஒரு பிரயோசன முமில்லாமல் இப்படியெல்லாம் வெறும் துவேஷத்தில் செய்கிற காரியங்கள் கடைசியில் பித்துக்குளித் தனமாகத்தான் முடிகின்றன.

**நன்றி: கல்கி**

**தகவல்: இலண்டன் சபரி**



# சிவயோகம்
## SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)
To facilitate here and beyond



### அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

# பௌர்ணமிப் பூசை PURNIMA POOJA

| மூல அம்மன் | எழுந்தருளி அம்மன் |
|---|---|
| **காலை** | **மாலை** |
| 9.30 மணிக்கு - சங்கல்பம் | 5.00 மணிக்கு - அபிசேகம் |
| 10.00 மணிக்கு - சிறப்பு அபிசேகம் | 6.30 மணிக்கு - ஸ்ரீ சக்ர பூசை |
| 12.00 மணிக்கு - சிறப்புப் பூசை | 7.30 மணிக்கு - சிறப்புப் பூசை (தங்க ரதம்) |

## 11 வகையான அபிசேகப் பொருட்கள் மற்றும் பலன்கள்

1. மஞ்சட் பொடி – லட்சுமி கடாக்ஷம் ஏற்படும், மனம் நிம்மதி பெறும், திருமணம் நடைபெறும்.
2. திருமஞ்சணப் பொடி – அரசாங்கம் சம்பந்தமாக உள்ள செயல்கள் வெற்றி அடையும், நல்ல வேலை கிடைக்கும், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும்.
3. பச்சரிசி மா – கடன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்.
4. பஞ்சாமிருதம் – குடும்பங்களில் ஒற்றுமை ஏற்படும்
5. தேன் – கல்வி, ஞானம், நல்ல சிந்தனை ஏற்படும்.
6. பால் (சகஸ்ர தாரை) – நவகிரஹ தோஷங்கள் குறையும், பாபங்கள் குறையும், நீண்ட ஆயுள் தரும்.
7. தயிர் – தோஷங்கள் நீங்கி குழந்தைப் பேறு உண்டாகும்.
8. பழச்சாறு – எதிரிகள் மனம் மாறுவார்கள், கண் திருஷ்டிகள் குறையும், கெட்ட கனவுகள் வருவது குறையும்
9. இளநீர் – நோய்கள் குணமாகும், ஆரோக்கியமான வாழ்வு உண்டாகும்.
10. சந்தனம் – செல்வச் செழிப்பு ஏற்படும், பேர், புகழ் ஏற்படும்.
11. பன்னீர் – தெய்வ சிந்தனை ஏற்படும், வேண்டும் நல்ல காரியங்கள் நிறைவேறும்.

கும்ப அபிஷேகம் – 16 வகையான செல்வங்கள் வந்து சேரும்.

| 2016 பௌர்ணமித் தினங்கள் | | | 2016 PURNIMA DAYS | | |
|---|---|---|---|---|---|
| 19/07/2016 | Tuesday | ஆடி | 11/01/2017 | Wednesday | தை |
| 17/08/2016 | Wednesday | ஆவணி | 10/02/2017 | Friday | மாசி |
| 16/09/2016 | Friday | புரட்டாதி | 12/03/2017 | Sunday | பங்குனி |
| 15/10/2016 | Saturday | புரட்டாதி | 10/04/2017 | Monday | சித்திரை |
| 14/11/2016 | Monday | ஐப்பசி | 10/05/2017 | Wednesday | வைகாசி |
| 13/12/2016 | Tuesday | கார்த்திகை | 08/06/2017 | Thursday | ஆனி |

**காலைப் பூசை குடும்பத்திற்கு £10 - Morning pooja per family £10**

**மாலை தனி பூசை உபயம் £150**

**பௌர்ணமிப் பூசைகளில் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற வேண்டுகிறோம்.**

**Temple Phone Number: 020 8767 9881**



Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford, Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Quality! Variety!! Satisfaction!!!
Veena's
CASH & CARRY
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com






# சைவமுன்னேற்றச் சங்கம்













# நால்வர் தமிழ்க் கலைநிலையம் கலைவிழா -2016





# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com

HOWEVER YOU SMILE

# SMILE WITH CONFIDENCE



Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING

GUM DISEASE TREATMENT

COSMETIC DENTISTRY

SMILE MAKEOVERS

GENERAL DENTISTRY

ORAL SURGERY & IMPLANTS

ENDODONTICS

CHILDREN'S ORAL HEALTH

EMERGENCY APPOINTMENTS

FACIAL REJUVENATION

Book your FREE consultation today!

**Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.**

If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.



Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.

Bluebell®
Dental Practice and Clinic

www.bluebelldp.co.uk

Tel: 020 8500 6789
140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP

invisalign DIAMOND PROVIDER

0% FINANCE AVAILABLE

YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஒக்டோபர் (14--10-2016) தொடக்கம் ஜனவரி (14-01-2017) வரை**

| | | |
|---|---|---|
| 14.10.2016 | வெள்ளி | நடேசர் அபிஷேகம் |
| 29.10.2016 | சனி | தீபாவளி |
| 30.10.2016 | ஞாயிறு | கேதாரகௌரி விரதம் நிறைவு |
| 31.10.2016 | திங்கள் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| 05.11.2016 | சனி | கந்தஷஷ்டி விரதம் பூர்த்தி |
| 21-11-2016 | திங்கள் | ஆறுமுகநாவலர் குருபூசை |
| 13.12.2016 | செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| 14.12.2016 | புதன் | விநாயக விரதாரம்பம் |
| 02.01.2017 | திங்கள் | திருவெம்பாவை ஆரம்பம் |
| 03.01.2017 | செவ்வாய் | விநாயக விரத நிறைவு |
| 11.01.2017 | புதன் | நடேசர் அபிஷேகம் ஆருத்ரா தரிசனம் |
| 14.01.2017 | சனி | தைப்பொங்கல் |

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

**வெள்ளிதோறும் மாலை 8.30 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவு ஆலயத்தில் நடைபெறுகிறது**

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# "பசுவுக்கொரு வாயுறை"

பசுக்களின்மீது பரிவுகொண்ட இருவர்பற்றிப் பெரியபுராணத்தில் வரலாறுகள் இரண்டு இயம்புகின்றன. மூலன் என்ற ஆநிரை மேய்ப்பவர் இறந்ததனால் வருந்தும் அப் பசுக்களைப் பார்த்து இரங்கிய சிவயோகியார் மூலனின் உடலில் நுழைந்து அந்த ஆநிரைகளை மகிழ்வித்துத் திருமூலராகியது ஒன்று. பசுக்களை மேய்க்கும் ஒருவன் அப் பசுக்களை அடித்துத் துன்புறுத்துவதைக் கண்டு அவனை விரட்டித் தாமே பசுக்களை மேய்த்துத் தன் தந்தையின் கால்களை வெட்டிய விசாரசருமர், சண்டேசுர நாயனாராய் ஆகியது இன்னொன்று. திருமூலர் பின்னர் அருளிய திருமந்திரத்திலே,

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

என்று பாடியதை நாம் மனத்திருத்த வேண்டும்.



நூற்றாண்டுகள் சில இந்த இருவரலாறுகளின் பின் கடந்துவிட்டன. இந்த நூற்றாண்டிலும் பசுவுக்காக இரங்குபவர்கள் இருக்கிறார்கள் என்பது அதிசயம், ஆனால் உண்மை.

சென்னையிலிருந்து சுமார் 70கிமீ தொலைவில் திருவள்ளூர் மாவட்டத்தில் வேங்கடபுரம் என்றொரு ஊர் உள்ளது. இங்கே Dr சாதனா ராவ் என்பவர் சாதனை புரிந்துகொண்டு இருக்கிறார். 42 வருடங்களின் முன் இவரின் சேவை ஆரம்பித்தது, இன்றும் தொடர்கிறது. மருத்துவத் துறையில் சேவை புரியும் இந்தப் பெண்மணி மக்களுடன் மாக்களுக்கும் சேவை புரிகிறார். இவருக்கு இப்போது 72 வயது. மக்களால் கைவிடப்பட்ட பசுக்களைப் பராமரிக்கும் பணியை இவர் தொடங்கினார். Indian Institute of Animal Welfare (IIAW) என்ற பெயரில் பசுக்களைப் பராமரிக்கும் சேவை தொடங்கியது. தொடக்கத்தில் 20 பசுக்கள் மட்டுமே இருந்தன. இன்று 600க்கு மேற்பட்ட பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. அவர் யாரடமும் பணம் கொடுக்கும்படி கேட்பதில்லை. தன் பொருளுடனும், தாமாகக் கொடுப்பவர்கள் உதவியுடனுந்தான் இச்சேவையைத் தொடர்கிறார்.



ஏழை விவசாயிகள் தம்மாற் பராமரிக்கமுடியாத பசுக்களைத் துரத்திவிடுகிறார்கள். சிலர் கசாப்புக் கடைகளுக்கு விற்றுவிடுகிறார்கள்.



வேகமாகச் செல்லும் வாகனங்களில் அடிபட்டு, காயப்பட்டு வரும் மாடுகள் கவனிப்பாரற்று அல்லற்படுகின்றன. கோயிலுக்கென மக்கள் தானமாகக் கொடுக்கும் மாடுகள் முதுமையடைந்ததும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. வேறு சிலபசுக்கள் புற்றுநோயாற் பீடிக்கப் படுகின்றன. கேரள மாநிலத்துக்கு மாமிசத்துக்காகக் கடத்திச் செல்லப்படும் பசுக்களைச் சிலர் மீட்டுவருகிறார்கள். இப்படி இந்த ஐந்து வழிகளாலும் இவரின் பராமரிப்புக்குப் பசுக்களும் எருதுகளும் வருகின்றன. தன் சொந்தச் செலவிலேயே பலகாலம் இச்சேவையைச் செய்துவந்த அம்மையார் தற்போது நிதிநெருக்கடியால் தன் பணியைத் தொடர்வதில் பல இன்னல்களை எதிர்கொள்ளுகிறார்கள்.

அறிவொளி வளையம் அமைப்பிலுள்ள அன்பர்கள் இந்தப் பணிக்கு நாமும் உதவினால் என்ன என்று சிந்தித்ததில் பிறந்ததுதான் பசுதர்மம். ஒரு வருடத்துக்கு ஒரு மாட்டைப் பராமரிக்க சுமார் நூறு பவுன் மட்டுமே செலவாகிறது. இந்தப் பணியில் சேர்ந்து உதவ விம்புவோர் உதவலாம். சிறுதொகையாக அளிக்க விரும்புவோரும் சிறுதொகை அளிக்கலாம். பசு ஒன்றைப் பராமரிக்க நம்மால் ஆன சிறு உதவி செய்வதால் பசு என்னும் நம்முடைய ஆன்மா நற்கதியடைய வழி சமைப்பதாகும் அல்லவா?







**தொடர்புகள் மேலதிக விவரங்கள் பெற:**

**Enlightment Circle SMS (UK) email: smsukyoga@gmail.com Phone: 07730313379**

**Bank: Lloyds Bank Plc, Wickford Branch. A/C 01610090 Sort code: 30-90-80**

# மஹாராஷ்டிரம்

## - பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க. கதிர்காமநாதன்

## வயித்தியநாதம் கோயில்

வயித்தியநாதம் பஞ்ச நாதத்தில் ஒன்றாகும். ஏனையவை, விஸ்வநாதம், சோமநாதம், ஜகந்நாதம், இராமநாதம் ஆகும். மேலும் சிவன் ஜோதிலிங்கமாக, மருத்துவராகச் சேவை செய்வது இங்குதான்.

**சூழ்தரு வல்வினையும் உடல்தோன்றிய பல்பிணியும்**
**பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்**
**போழிய வெண்மதியும் அனல்பொங் கரவும் புனைந்து**
**தாழ்சடையன் எழுந்தருளும் வயித்தியநாதமே**

சம்பந்தர்

**புராண வரலாறு:**
தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும்போது தனவந்திரியும் அமிர்தமும் தோன்றின. விஷ்ணு அமிர்தத்தையும் தனவந்திரியையும் சிவலிங்கத்துள் மறைத்துவைத்தார். அசுரர்கள் லிங்கத்தைத் தொட்டவுடன் அக்கினிச் சுவாலைகள் எழுந்தன. அவர்கள் அதற்கு அஞ்சித் தப்பி யோடினர். ஆனால் அரனில் அன்புகொண்ட தேவர்கள் ஸ்பரிசித்தவுடன் அமிர்தம் சுலபமாகச் சுரந்தது. இதனால் இன்றும் மக்கள் வழிபடும்போது லிங்கத்தைத் தொட்டும் தலையால் முட்டியும் ஸ்பரிசித்து வணங்குவர்.

**இறைவன்: வயித்தியநாதர்**
**இறைவி: தையல்நாயகி**

லிங்கத்தினுள் அமிர்தமும் தனவந்திரியும் இருப்பதால் இறைவனை அமிர்தேசுவரர், தனவந்திரி என்றும் கூறுவர்.

இவ்வாலயம் பரளி என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. கன்னியாகுமரிக்கும் உஜ்ஜைனிக்கும் ஒருவர் நேர்க்கோடு ஒன்றை வரைந்தால் அக்கோட்டில் பரளி கிராமம் அமைந்திருக்கும். மலைகளும் அடர்த்தியான மரங்களும் நிறைந்த பரளியைச் சித்தபூமி என்பர்.

மலைமீது இருக்கும் இந்தத் தலத்தை அகன்ற படிக்கட்டு மூலம் ஏறிச் சென்றடைந்தோம். நாற்புறமும் பலமிக்க பெருஞ்சுவர்களைக் கொண்டு ஒரு கோட்டைபோலத் தோற்றமளிக்கிறது. உள்ளே கோயிற் பிரகாரமும் முன் மண்டபமும் ஒரே அளவில் உள்ளன. வேறு கோயில்களில் இந்த அமைப்பைக் காணமுடியாது. முன் மண்டபத்தில் ஆமை வடிவமுள்ள தரை உள்ளது. இதில் நந்தி மண்டபமும் உளது. நந்தி மண்டபத்தில் மூன்று நந்திகள் வெள்ளி உருக்கில் வார்த்ததுபோல அமைந்துள்ளன. முன் இரண்டும் ஒரே அளவாகவும் பின்னது சற்றுச் சிறிதாகவும் உள்ளது. இதே போன்று ஒரு கோயிலிலும் நாம் கண்டதில்லை. புதுமையான அநுபவம்!

இக்கோயிலை இரவிலேதான் சென்றடைந்தோம். உடன் தரிசனம் கிடைத்தது. காலையில் அபிஷேகம் செய்யலாம் எனக் கூறினர். உடனே அதற்குப் பணம் செலுத்திச் சீட்டு வாங்கினோம். மறுநாட் காலை 5 மணிக்குச் சென்றோம்.

ஜோதிலிங்கம் சாலிக்கிராமக் கல்லால் உளது. மூன்றடி உயரம், கரடுமுரடு இல்லாததுமாகும். வெள்ளிக்கவசம் போட்டிருந்தனர். சிவப்பு நிறப் பிள்ளையாரை வணங்கி ஆறுமணிபோல் கோயிற் பிரகாரத்தினுட் சென்றோம். அங்குள்ள சிவாசாரியர் எம்மைக் கனிவோடு அழைத்தார். மொழி தெரியாவிடினும் மனிதநேயத்தால் உணரமுடிந்தது. நாங்கள், மனைவி, மகன், கார்ச்சாரதி மட்டுந்தான் மிகப்புனிதமாக அங்கு இருந்தோம்.

முதலில் யாவருக்கும் தர்ப்பை அணிவித்து சங்கல்பம் செய்தார். மந்திரங்கள் ஓதி அவற்றைத் திருப்பி எமையும் ஓதும்படி சொன்னார். பின்னர் பாலபிஷேகம். எமக்கும் பால் கொடுத்து ஊற்றி, தொட்டு தடவி, மந்திரங்கள் அவர் பின் ஓதி வணங்கும்படி செய்தார். லிங்கம் சற்று தூரத்தில் இருந்தது என்றாலும் கையாற் தொட முடிந்தது. இதேபோன்று இலை, சந்தனம், தேன் போன்றவற்றை வைத்து, தொட்டுத் தடவி தொழுதோம். இத்தகைய அநுபவம் வேறு எந்தச் சோதிலிங்கத்தைத் தரிசிக்கும்போதும் எமக்குக் கிடைத்ததில்லை.

எமது ஜோதிலிங்கப் பயணத்தில் இதுதான் பன்னிரண்டாவது ஜோதிலிங்கம் ஆகும். பயணம் பூர்த்தியானதை இறைவன் காட்டவோ என்னவோ, இப்படியாக உருகி, வணங்கி, தனியாக அமைதியான ஆனந்தமான, பரவசமானவராக எமைச் செய்தார். இறைவனைத் தொட்டு தடவி ஆறுதலாகத் துதித்து, தொழும்போது அடையும் ஆனந்தத்தை வார்த்தைகளாற் கூறமுடியாது.

இக்கோயிலை எப்போதும் எவரும் தரிசிக்கலாம். நாங்கள் ஹைதராபாத் இருந்து கார்மூலம் இக்கோயிலைச் சென்று தரிசித்தோம். ரயில் மூலமாகவோ பேருந்து மூலமாகவோ இலகுவாக அடையலாம். தினசரி நாலு காலப் பூசைகள், சிவராத்திரி, கோலிப் பண்டிகை, கார்த்திகை தீபம் ஆகியவை விசேஷ கொண்டாட்டங்கள்.

**வைத்தியநாதங்கள்:**

பாவா வைத்தியநாத் என்ற கோயில் பீகார் மாநிலத்தில் பாட்னாவிற்கு சமீபத்தில் உளது. இதைவிட பஜிநாத் என்ற ஆலயமும் வைத்தியநாதம் ஆகும்.

தமிழ் நாட்டில் வயித்தீஸ்வரன்கோயில் பிரசித்தி பெற்றது. இறைவன் வயித்தீஸ்வரர். இறைவி தையல்நாயகி. மஹாராஷ்டிர பரளி வயித்தியநாதத்திலும் பெயர் ஒற்றுமை குறிப்பிடத்தக்கது. வயித்தீஸ்வரன் கோயில் திருச்சாந்துருண்டை பிரசாதம் தீவினையையும் தீர்க்கும்.

திருவான்மியூரில் இறைவனை மருந்தீஸ்வரர், வான்மீகர், வேதபுரீஸ்வரர் அமிர்தேஸ்வரர் என அழைப்பர். திருச்சியிலிருக்கும் தாயுமானவர் கோயிலில் இறைவன் மருத்துவச்சியாக பிரசவம் பார்த்துத் தாயுமானவர் ஆனார்.

இவைபோன்று பல ஆலயங்களில் இறைவன் வயித்தியராக அருள்புரிந்துள்ளார். ஆனால் ஆன்மிக வாதிகள் பரளியில் ஜோதிலிங்கமாக இருக்கும் வயித்தியநாதரையே மேலானவராக கருதுகின்றனர். வைஷ்ணவருக்கு தனவந்திரி போன்று சைவர்களுக்கு வைத்தியநாதங்கள்.
வாழ்வுதரும் வைத்தியநாதா போற்றி.

**பின்னுரை:**

மஹாராஷ்டிரத்தின் தலைநகர் மும்பை ஆகும் பம்பாயை மும்பையாக மாற்றியது இறைவி மும்பாதேவிதான். மும்பை இந்தியாவின் பொருளாதாரத் தலைநகர் மட்டுமன்றி ஜோதி லிங்கங்கங்களுக்கும் தலைசிறந்த இடமுமாகும் பன்னிரண்டு ஜோதிலிங்கங்களுள் இங்குதான் அதிகமாக (5 லிங்கங்கள்) உள்ளன. தமிழ்நாட்டில் ஒரேயொரு ஜோதி லிங்கமாக இராமேசுவரம் உள்ளது.



மும்பை கோயில்களுக்கு மட்டுமன்றி, பொலிவூட் படங்களுக்கும் பெயர்பெற்றது. உலகசாதனை ஈட்டும் அளவுக்கு இங்கே திரைப்படங்கள் தயாராகின்றன. கிரிக்கெட் ஜாம்பவான் ஆகிய சச்சின் தெண்டுல்கர், ரவி சாஸ்திரி ஆகிய இருவரையும் மும்பை அளித்துள்ளது.

எமது இதயத்தைத் தொட்டது சேரி மக்களின் தெருவில் நடைபெற்ற நவராத்திரி விழாவாகும் இது நினைவில் நீங்காமலே நிலைத்து நிற்கிறது.

மும்மூர்த்திகளைக் கொண்ட ஒரே ஜோதிலிங்கம் திரியம்பகம் ஆகும். அதன் கோதாவரி ஆறும் அருளும் நல்ல அநுபவம். இதைவிட சீரடிபாபா கோயில், எல்லோரா கோயில் யாவும் கொண்டது மஹாராஷ்டிரம்.



பரளி வயித்தியநாதம் கோயிலிலேதான் அன்று எஸ் எஸ் சியில் பெரியபுராணத்தில் படித்த நாயன்மார் இறைவனைத் தரிசித்து 'ஆனந்த பரவசராகி ஆடல் பாடல்புரிந்தார்' என்ற வாசகத்தின் அர்த்தம் அநுபவம் கிட்டியது.

மராட்டி மாத்திரம் தெரிந்த மஹாராஷ்டிரத்திலும் மனிதநேயத்துக்குக் குறைவே இல்லை.

**கடந்த பல இதழ்களில் DR கதிர்காமநாதன் அவர்கள் மஹாராஷ்டிரப் பயணத்தில் தான் பெற்ற ஆன்மிக அநுபவங்களைக் கலசம் வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டார். பல தகவல்களை, விவரங்களைச் சுவைபட எழுதிவந்தார். நேரிலே சென்று பார்த்ததுபோல இருந்ததாகவும், இந்தக் கட்டுரைகளை வாசித்துப் பயன் அடைந்ததாகவும் சில வாசக அன்பர்கள் கூறினர். அவரின் இந்தத் தொடர் கட்டுரை இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது. அவருக்குக் கலசம் நன்றி தெரிவிக்கிறது.**

**ஆசிரியர்**

# Hinduism in search of Answers..........

Compiled by S Atputhananthan

### How do the Western countries view the texts of Hinduism?



Indian philosophy is rich, life affirming and its sole purpose is to help mankind integrate itself with nature. To quote **Swami Vivekananda** in an interview:

"West feels that the India has much to learn from them. The average westerner is pretty ignorant as to what may he learn from India. However, the scholars know well how much is to be learnt and how important the lesson. One would not find Max Muller, Monier Williams, Sir William Hunter and other German scholars making light of Indian abstract science"

### Arthur Schopenhaur :



"Access to the Vedas is the greatest privilege this century may claim over all previous centuries. In the whole world there is no study so beneficial and so elevating as that of Upanishads. It has been the solace of my life and it will be the solace of my death".

### Professor Monier Williams:

"A system which is, in some respects, almost identical with that thought out by Spinoza and the profoundest thinkers of modern Europe, the strength of Hinduism lies in its infinite adaptability to the infinite diversity of human character and human tendencies. It has its highly spiritual, and abstract side suited, to the philosopher. Its practical and concrete side congenial to the man of the world. Its aesthetic and ceremonial side attuned to the man of the poetic feeling and imagination, and its quiescent contemplative aspect that has its appeal for the man of peace and the lover of seclusion." "The Hindus, were Spinozists more than 2,000 years before the advent of Spinoza, Darwinians many centuries before Darwin. And Evolutionists many centuries before the doctrine of Evolution was accepted by scientists of the present age".

### Larry Brown (in 'The essential teachings of Hinduism':

"In the last century Vedas were translated into many European languages. Modern thinkers who read these ancient books are humbled by the realisation that wisdom we so proudly claim as the triumph of 20th century western progress is, in fact, very ancient. Pre-empting

Darwin and Spinoza is only tip of the iceberg. The recently re-discovered sixteen aphorisms of Vedic mathematics provide the formulae for mental computation of complex equations in all branches of mathematics. A culture which was essentially oral, could calculate the square root without putting pen to paper or fingers to calculation.

"Examples abound in all the arts and sciences from philosophy to physics and we cannot doubt that even now, the wisdom of the great seers of ancient India has yet to be fully appreciated. Even modern physics appears to take us closer to Upanishads, that universe is nothing but the thought itself."

**Troy Organ (Professor at Ohio University):**

"In the Hindu world, the folklore and popular mythology carry the truths and teachings of the philosophers to the masses. In India, the mythology never ceased to support and facilitate the expression of philosophic thought. The rich pictorial script of the epic tradition, the features of the divinities, whose incarnations and exploits constituted the myth, became the vehicle of communication for the priests.

In this way a wonderful friendship of mythology and philosophy was effected. The close interdependence of the two has served to counteract the natural tendency of the philosophy to become esoteric, removed from solving life's problems. In this symbolic form, the ideas have not been watered down to become popular. The vivid, perfectly appropriate pictorial script preserves the doctrines without the slightest damage to their senses."

**Where Does Heaven exist?**



The concept of a heaven in the hereafter is perhaps as old as the human race itself. But in the entire history of mankind, if one looks at the definition of heaven of any culture, of any religion, of any race in an era, one finds that it consists of the things that the people in that group are deprived of, or the things that they really miss in their lives. They project these things to be present in abundance in 'their heaven'. As an example, the Indian heaven almost invariably has rivers of milk and 'ghee' flowing through it. It is nothing but a longing for three sumptuous meals a day, which lot of people do not get. When there is shortage, even of clean drinking water, you can well understand why we would imagine heaven to be loaded with food.

The second thing that almost invariably pops up in the definition of heaven is that it is peaceful and tranquil up there. Might that reflect our desire for an end to the hatred? That different ethnic and religious groups harbour against each other?

With this thought in mind, should it not be the aim of life to create the conditions of heaven right here on earth? Should we not be working to achieve material and spiritual prosperity in our lives and thereby make the whole concept of heaven in the hereafter obsolete? If we

could tame our cravings and make our lives full of joy, we probably would not even accept the concept of heaven, much less long to retire to.

And that brings us to the idea of feeling happy with what we have; striving for more but nevertheless being at peace with ourselves. The Upanishads tell us to think of ourselves as mere users and not owners of our worldly possessions, of our status in the society and of the family we are blessed with. Following this canon just might do the trick and enable us to experience the heaven while we still reside on the mortal shores.

**What are the common Dharma applicable to all?**

Public (Pahiranga Sadhanam)

- Charity - donations
- Pooja - prayers
- Helping others

**Private (Antharanga Sadhanam)**


- Ahimsa – avoiding to hurt others
- Sathyam – speaking the TRUTH
- Asthiyam – Not stealing
- Sowsam – Cleanliness
- Indriya Nirkam – Keeping the 5 senses in control.

**How is Caste system defined in Hinduism?**




The Vedas and Upanishads classified the society into four major divisions. Priests (or educators), Rulers (or Soldiers), Merchants/farmers (or Business Administrators) and Servants (or Workers). This was only the ideological framework. These four varnas (or types) developed into multitude of Jatis (castes) - birth groups (as in the present day) were not the intention. Most of them associated with specific occupation.

[For ordinary humans, what is important is to perform correct actions, which will in turn ensure benefits in the present life and advantageous re-birth. The delineation of what constitute correct actions was carefully elaborated in a system called VARNASHRA DHARMA – duties in accord with caste and stage of life.




Some people like to be very active. They love to work. The method they use to find God is called path of action or Karma Yoga. Krishna teaches in the Bhagavad-Gita, "Action is better than inaction". This forms the basis of this particular path. It says that we cannot really avoid action. Even if we sit in the remotest place our mind will still continue to conjure up images and be active. The best thing is not to stop acting but to act in a manner that helps to cleanse the mind. The simplest method recommended is to continue to act but to offer the fruits of our action to God. Thus we begin to develop a sense of detachment in the midst of all activities. The ultimate reality as our true self is best described as the witness looking out through the body. By following this practice of non-attachment to our actions we get closer to our true self as the witness.]

**How has Hinduism's survived in spite of influence from other religions?**

Hinduism is neither asceticism nor illusionism; neither polytheism nor pantheism. It is the synthesis of all types of religious experience. It is whole and complete view of life. It is characterised by wide toleration, deep humanity, and high spiritual purpose. It is more elastic and tolerant than many other religions.

Foundation of Hinduism has been laid on the bedrock of spiritual truths. Entire structure of Hindu life is built on eternal truths, the findings of the Hindu Rishi's/ Seers.

One of its features, Dharma, is Universal. Doctrines are sublime. Philosophy is grand. Ethics is soul-searching. Yoga is unique.

## Spread of global Hinduism today:

There have been two waves of Hindu emigration, First occurred in 19th century, the quest of work caused Indians to emigrate to Myanmar (Burma), Sri Lanka, Malaysia, South Africa, Fiji Islands and the west Indies. By the 1920;s there were approximately two million Hindus living away from India.

The second wave really gained momentum since the 1960's and the third wave started with the anti-Tamil riots in Sri Lanka and the civil war afterwards. During the first years in the new land, the immigrants were focused on economic success and did not worry about the lack of facilities for religious life. As they began to raise families they felt that religion is necessary to pass on the cultural values to their children.

The generation gap, and the fact the children are growing up mediating between two cultures, are two major hurdles. Most of the children are proud of their heritage, but are affected by the cultural exposure at school and work. Growing up in western societies they become uncomfortable with some of the practices of traditional Hinduism.

It has been said that Hinduism does not get rid of anything. New ideas and practices are simply added and absorbed and the old philosophies are re-interpreted. Hinduism is a tradition, being eternally re-born and the karmic impressions of the past and present are forces that shape the future. This process will continue. Hinduism has more than 3000 years of diverse traditions from which to draw ideas and strength.

It is to be noted that Hinduism like Judaism has become a world religion through migration not missionisation. Religious traditions are closely tied to the ethnic culture.

# Why should we protect the cattle?



Cows which have stopped yielding milk should not be sent to slaughter houses. They have to be protected till their last breath. It is our bounden duty to do so, in the same way that we take care of our own mother. In the scheme of creation, the cow which feeds us with her milk after feeding her own calf, enjoys the same status as our mother. Even in Islamic kingdoms of yore like Afghanistan, cow slaughter had been banned many years ago.

In India, British rulers fanned the flames of religious prejudices in this issue. Whichever may be the government, whatever may be the law, if we consider it our holy duty to prevent cows from being taken to slaughter houses, no harm will come to the Gomatha. We may bring a law banning cow slaughter but we should also ensure that cattle not fit for milking or agriculture  are taken proper care of. Otherwise they will suffer from starvation and  neglect and live a living death. Protection of cow os not merely  amatter of compassion, but is equivalent to Lakshmi Puja, worshipping the Goddess of wealth.

***Jagadguru Sri Chandrasekharendra Saraswathi Swamigal***

# கண்ணனும் தாத்தாவும்



**- முத்து -**

இலண்டனில் பாடசாலைகளின் கோடைகால விடுமுறையின் கடைசி வாரம் அது. பெற்றோர்களும் பிள்ளைகளும் அந்தக் கடைசி வாரத்தையும் பயனுள்ளதாகக் கழிக்கவேண்டும் என்பதில் கருத்தாக இருக்கின்றனர். கோடைகாலம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதைப்போல காலநிலை மிகவும் சூடாக இருக்கிறது. கண்ணன், அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரும் இலண்டன் ஐ (London eye) பார்க்கப் போனார்கள். அநுமாரின் வால்போல நீளமான வரிசையில் ஒரு மணிநேரம் காத்திருந்தபின் அந்தப் பிரமாண்டமான சக்கரத்தில் (Giant wheel) தொங்கிக்கொண்டிருந்த கூண்டுபோல ஒரு பெட்டியில் ஏறி அமர்ந்தனர். கண்ணனுடைய குதூகலத்துக்கு அளவேயில்லை. சக்கரம் மெதுவாக சுழன்றபடி அவர்களை ஏற்றிக்கொண்டு மேலே உயர ஆரம்பித்தது. பெற்றோரும் தாத்தாவும் ஒவ்வொரு உயரமான கட்டடங்களையும் இடங்களையும் சுட்டிக்காட்டிக் கண்ணனுக்கு விளங்கப்படுத்தினர்.

கண்ணன்: ஓ.... எவ்வளவு தூரம் தெரிகிறது தாத்தா! நிறையக் கட்டடங்கள், நாடாளு மன்றத்தின் மணிக்கூட்டுக் கோபுரம், பக்கிங்ஹாம் மாளிகை, தேம்ஸ் நதி எத்தனை? எத்தனை?

தாத்தா: இலண்டன் நகரம் முழுவதையும் இங்கிருந்து பார்க்க முடியுது. அதனாலேதான் இதற்கு 'இலண்டன்' ஐ என்று பெயர் வைத்திருக்கிறார்கள் கண்ணா!

கண்ணன்: அது நல்ல பெயர்தான் தாத்தா! எங்கள் கண்ணுக்கு எல்லாமே தெரிகிறது தாத்தா. தேம்ஸ் ஆற்றின் குறுக்கே எத்தனையோ பாலங்கள் தெரிகிறதே!

தாத்தா: அந்தப் பாலங்களில் எத்தனை கார்கள் பேருந்துகள் ஓடுகின்றன பார் கண்ணா! ஒரு பாலமோ இரண்டு பாலமோ போதாது. மிகவும் நெருக்கடியாக இருக்கும். அதனாலேதான் பல பாலங்கள் கட்டியிருக்கிறார்கள் கண்ணா!

கண்ணன்: ஆற்றில் படகுகள் கப்பல்கள் மிதந்து செல்வதுமாதிரித் தெரிகிறது தாத்தா!

தாத்தா: ஆமாம் கண்ணா. படகிலே சிலர் உல்லாசமாக சுற்றி வருகிறார்கள். சிலர் ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்குப் போகிறார்கள். சில படகுகள் பொருள்களை ஏற்றிச் செல்லவும் உதவுகின்றன. சிலர் சில படகுகளில் பிறந்தநாள் விழாக்கூடக் கொண்டாடுகின்றார்களாம்.

கண்ணன்: அப்போ உங்கள் அடுத்த பிறந்த நாளை அந்தப் படகிலோ கப்பலிலோ கொண்டாடலாம் தாத்தா.

அப்பா: ஆமாம் கண்ணா, அது நல்ல யோசனைதான்.

தாத்தா: சின்னப் பிள்ளைகளுக்குத்தான் பெரியவர்கள் பிறந்தநாள் கொண்டாடி மகிழ்வார்கள் கண்ணா. (இவர்கள் தமிழிலே பேசுவதைப் பக்கத்திலிருந்த ஒருவர் கேட்டு இரசிப்பதைத் தாத்தா கவனித்துத் திரும்பிப் பார்க்கிறார். அவர் தாத்தாவின் பழைய நண்பர் ஒருவர்)

என்ன சிவகுமார்? பக்கத்தில் இருந்தும் பேசாமலே இருக்கிறீர்?

நண்பர்: நீங்களும் பேரனும் தமிழிலே பேசுவதைக் கேட்டு இரசித்துக் கொண்டிருக்கிறேன். அவன் தமிழ் நன்றாகப் பேசுவதைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது; அதிசயமாகவும் இருக்கிறது.

தாத்தா: ஓகோ! உங்களுக்கும் ஒரு பேரன் இருக்கிறான் போலத்தெரிகிறதே! உங்களைப் பார்த்து எத்தனையோ வருடங்கள் ஆகிப்போச்சு.

நண்பர்: நானும் ஸ்கொட்லாந்தில் குடியேறிவிட்டேன். அங்கே நல்ல வேலையொன்று கிடைத்தது. வீடும் வசதியாக வாங்க முடிந்தது. அப்படியே வாழ்க்கை போய்விட்டது. இவன் என் பேரன்தான். இவனுடனேயே சந்தோஷமாகப் பொழுது போகிறது. இன்றுதான் என் பிள்ளைகளுக்கும் பேரனுக்கும் தமிழ் பேசப்பழக்காத தவறை நான் உணர்கிறேன்.

தாத்தா: இங்குள்ள அவசர வாழ்க்கையில் செய்யவேண்டிய சிலவற்றை நாங்கள் செய்யத் தவறிவிடுகிறோம். இன்றிலிருந்து பேரனுடன் தமிழிலே பேசுங்கோ. இலண்டனில் தமிழ் படிக்கவும் சமயத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும், நடனம், சங்கீதம் கற்றுக்கொள்ளவும் நிறை வசதிகள் உள்ளன.

நண்பர்: அங்கு எதுவுமே இல்லை. இருந்தாலும் நான் தமிழிலே பேசக் கற்றுக் கொடுத்திருக்கலாம். இல்லையா? அதற்கு வசதியில்லை என்று சொல்ல முடியாது அல்லவா?

பாட்டி: எங்கள் வீட்டில் தாத்தாவுக்கு வேலை பேரனுக்கு சைவசமயத்தைப்பற்றி எந்த நேரமும் போதிப்பதுதான். படிக்க விடுகிறார் இல்லையென்று மகனும் மரும களும் குறைபடுகிறார்கள். அவன் இந்த வருடம் 11+ பரீட்சை எடுக்கவேண்டுமாம்.

தாத்தா: இவவுக்கு என்ன தெரியும்? சைவசமயத்தைக் கற்பிக்கும்போதே பிள்ளைகள் தமிழையும் கற்றுவிடுகிறார்கள். தமிழும் சைவமுந்தான் பிள்ளைகளை அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு வழிகாட்டும். உயர்ந்த பட்டம் பதவியில் உள்ளவர்கள் எல்லாம் வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து வாழ்கிறார்களா? அமைதியாக ஆனந்தமாக வாழ்கிறார்களா?

நண்பர்: உங்கள் கணவர் சொல்வது முழுவதும் உண்மை அம்மா! நானும் அந்த உண்மையை வயது போனபின்னர்தான் உணர்ந்துள்ளேன்.

(எல்லோரும் லண்டன் ஐ சுற்றி முடித்து வெளியே வருகிறார்கள். கண்ணனும் ஸ்ரீராமும் பலநாள் நண்பர்கள்போலப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள்)

கண்ணன்: தாத்தா! ஸ்ரீராமையும் அவருடைய தாத்தாவையும் எங்கள் வீட்டுக்குக் கூட்டிப்போவொமா?

ஸ்ரீராம்: I want to go to Kannan house Grand dad. Please say yes!

தாத்தா: உங்கள் பேரனும் எங்கள் பேரனும் ஆசைப்படுகிறார்கள். நீங்கள் வந்தால் எங்கள் எல்லோருக்கும் சந்தோஷந்தான். எங்கள் ஊரில் இருக்கும் கோயில்களையும் பார்க்கலாம். வித்தியாசமான அநுபவந்தானே!

நண்பர்: உங்கள் அன்பான வரவேற்பை எப்படி மறுக்க மனம் வரும்? பேரப்பிள்ளைகளுடன் பொழுது போக்குவது எவ்வளவு சந்தோஷம்? நானும் பேரனுக்கு அதிக செல்லம் கொடுத்துக் கெடுப்பதாக எங்கள் வீட்டிலும் குறைபடுவார்கள்.

(எல்லோரும் தொடருந்தில் (Train) ஏறி ஈஸ்ட்ஹாம் ரயில் நிலையத்தில் இறங்கி முருகன் கோயிலையும், மஹாலட்சுமி நாராயணர் கோயிலையும் தரிசித்துவிட்டு வெளியே வருகின்றனர்.)

தாத்தா: லண்டனில் கிழக்கில் இருக்கும் கோயில்களில் இவை இரண்டுந்தான் பெரியவை. அதனால் இங்கு கூட்டிக்கொண்டு வந்தேன்.

நண்பர்: மிகவும் நன்றி, மிகவும் சந்தோஷமான அநுபவம். தமிழர்களின் மிகவும் பெரிய சாதனை. காலத்தால் அழியாது இருக்கும்.

கண்ணன்: தாத்தா! ஸ்ரீராம் கேட்கிறார், எல்லா விக்கிரகங்களுக்கும் எங்கள் முகம்போல இருக்க பிள்ளையாருக்கு மட்டும் முகமும் உருவமும் வேறுமாதிரி இருக்கறதே! ஏனென்று சொல்லுங்கோ! நான் அவருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்கிறேன்.

தாத்தா: பிள்ளையாரின் முகம் யானையின் முகம்போல இருக்கிறது. இது 'ஓம்' என்னும் ஒலியின் வரிவடிவம். இது இந்து சமயத்தில் மிகவும் முக்கியமானது. இதன் முழுத்தத்துவத்தை ஸ்ரீராம் வளர்ந்து பெரியவனாகிய பின்பு படித்தறியலாம்.

நண்பர்: முழுவதையும் விவரமாகச் சொல்லுங்கோ! எனக்கும் ஒன்றும் தெரியாது. சிறு வயதில் சமயபாடம் படிக்கும்போது அறிந்தமட்டுந்தான்.

தாத்தா: அப்படியா? சரி கேளுங்கள். அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்கள் சேர்ந்தது 'ஓம்' அ -கடவுளின் படைத்தல் தொழிலையும் உ - காத்தலையும் ம - அழித்தலையும் குறிப்பன.

நண்பர்: பெரிய செவியும் (காது) பெரிய வயிறும் எதைக் குறிக்கின்றன?

தாத்தா: பெரிய வயிறு பத்தர்களின் பாவங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அவர்களைக் காக்கும் கருணையைக் குறிக்கிறது. பெரிய காதுகள் மனிதர் அதிகமாகக் கேட்கவேண்டும் என்பதையும் சிறியவாய் குறைவாகப் பேச வேண்டும் என்பதையும் கூர்மையான கண்கள் மனிதர்கள் எதையும் கூர்மையாகக் கவனிக்கவேண்டும் என்பதையும் குறிக்கின்றன.

கண்ணன்: அவர் முகத்தில் இருக்கும் தந்தங்களில் ஒன்று பாதி முறிந்தமாதிரி இருக்கிறதே! அதைச் சொல்ல மறந்துவிட்டீர்களே தாத்தா!

தாத்தா: ஓ....! அதுவா...! மகாபாரதக் கதையைப் பிள்ளையார்தான் எழுதினாராம். அப்போது அவர் கையிலிருந்த எழுத்தாணி முறிந்துவிட்டதாம். உடனே தன் தந்தத்தை முறித்து அதனால் எழுதினாராம். அவரைப்பற்றி நிறையச் சொல்ல இருக்கிறது கண்ணா.

கண்ணன்: ஸ்ரீராம்! இதோ எங்கள் வீடு வந்துவிட்டது.

ஸ்ரீராம்: Do you go to the temple often because it is near your house?

கண்ணன்: வெள்ளிக்கிழமைகளில் கட்டாயம் எல்லோரும் போவோம். மற்றைய விசேட நாள்களிலும் போவோம்.

(பாட்டி எல்லோரையும் அன்புடன் வரவேற்று தான் சுவையாகச் சமைத்துவைத்த உணவைப் பரிமாறுகிறார். எல்லோரும் ரசித்துச் சாப்பிடுகின்றனர். பின்பு கண்ணன் தனக்குத் தெரிந்த தேவாரங்களைப் பாடிக் காட்டுகிறான். ஸ்ரீராமும் அவனின் தாத்தாவும் ஆச்சரியமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.)

நண்பர்: ஐரோப்பாவிலிருக்கும் தமிழர் எல்லோரும் ஏன் இலண்டனுக்கு வந்து குடியேறு கிறார்கள் என்று எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது. எனது தவறும் புரிகிறது.

தாத்தா: மகனுக்குப் படிப்பிக்க வசதி இல்லாமற்போச்சு. உங்கள் பேரனுக்குத் தமிழையும் சமயத்தையும் முடிந்தளவு சொல்லிக்கொடுங்கள்.

நண்பர்: முதலில் நான் படித்தறியவேண்டும்.

தாத்தா: இப்பொழுதெல்லாம் இணையதளத்தில் (Web site) பார்த்துப் படித்து அறிந்து கொள்ளலாமே! திருக்குறள், தேவாரம் போன்றவற்றுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் இருக்கிறது. உங்களுக்கும் நேரம் இருக்கிறதுதானே.

நண்பர்: ஆமாம்! நிச்சயமாக! அப்படியே செய்வேன். உங்கள் அனைவரையும் சந்தித்தது என் பாக்கியம். அனைத்துக்கும் நன்றி. தொடர்பில் இருப்போம்.

தாத்தா: ஆம் ஆம் கட்டாயம் நாங்கள் மறந்தாலும் பேரன்மார் எங்களை ஒன்றுசேர்ப்பார்கள்.

(பிரிய மனமின்றி விடைபெறுகின்றனர். ஸ்ரீராமும் ஸ்ரீராமின் தாத்தாவும் கண்ணனும் கண்ணனின் தாத்தாவும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கையசைத்துக்கொண்டிருந்தனர்.)





# Let us be Hindus - in practice!

## Swami Chinmayananda

**[Swami Chinmayananda's legendary mission began with a bold and brilliant lecture invoking change. Only 18 people attended Swami Chinmayananda's first lecture, in Pune, India, on December 23, 1951. Though the organizers of the event thought it was a flop, the 32-year-old swami knew it was not. The talk, which is below, called for a Hindu Renaissance. That Renaissance became the theme and substance of the swami's work for the following 42 years]**

It has become a new fashion with the educated Hindu to turn up his nose and sneer at the very mention of his religion. I, too, have been among these critics. But when it is proclaimed that we would benefit socially and nationally by running away from Hinduism, I pause to reconsider my stand.

However much decadent our religion may have become, it is far better than no religion at all. My proposal is that we bring about a renaissance of Hinduism so that within its greatness which has been proven through many centuries we may re-attain the past culture and civilization that we have lost.

To some, no doubt, Hinduism in India has come to be nothing more than a bundle of superstitions or a certain way of dressing, cooking, eating, talking and so on. Our Gods have fallen to the mortal level of administration officers at whose altars we pray for special permissions and get them if the required fees are paid to the priests!

This degradation is not the product of any accidental or sudden historical upheaval. For two hundred years, Hinduism has been catering to the rich. Once upon a time long ago, the learned philosophers, known as brahmins, wisely advised the rulers, called kshatriyas. But through time, the brahmins and the kshatriyas became indulgent, and the purity of their lifestyle deteriorated. Today, the cry of the educated class is really against this un-religion. Only the thoughtless would call this Hinduism.

Certainly, if Hinduism can breed for us only heartless and corrupt businessmen, cowardly workers, loveless masters and faithless servants; if Hinduism can give us only a state of social living in which each man is set against his brother; if Hinduism can give us only starvation and destitution; if Hinduism can encourage us only to plunder, to loot and to steal; if Hinduism can preach to us only intolerance, fanaticism, hardheartedness and cruelty; then I too cry, "Down! Down with Hinduism!"

The true Hinduism is a science of perfection. There is, in this true Hinduism, a solution to every individual, social, national and international problem. True Hinduism is the Sanatana Dharma (eternal truth) of the Upanishads.

The Upanishads proclaim in unmistakable terms that, in reality, man is eternal. Man is therefore advised to live his day-to-day life in such a systematic way that, hour by hour, he is consciously cleansing himself of all those impurities that have gathered to conceal the beauty and divinity of his true, eternal nature. The methods by which an individual may consciously evolve by his own self-effort comprise the content of Hinduism. The vast amphitheatre of Hinduism is preserved, yet hidden, deep within the camouflage of its heavy descriptions, which are contained in the scriptures and their many, many commentaries. This overgrowth has so effectively come to conceal that true grandeur of this Temple of Truth that, today, that temple is all but lost amidst its own festoons.

Religion becomes ineffective if the seekers are not ready to live its ideals. For that matter, is there any philosophy political, social or cultural, that can take anyone anywhere if its followers don't obey certain principles in daily life?

However great our culture might have been in the past, that history alone cannot help us in our present trails. We must learn, then live, the Hindu life. Knowledge alone will not suffice. A study of a cookbook, however thorough it may be, cannot satisfy our hunger. No matter how long we meditate upon and repeat the name of a medicine, we cannot obtain its cure unless we actually ingest it. Similarly, the blessings of religion can be ours only when we are ready to live its recommended values.

Renunciation is also required. Without renunciation, no progress is possible. We must renounce the thrills of our childhood games so that we might grow to be men of noble action. Unless we are ready to renounce the low, animalistic values of material life and replace them with the noble values of a truly religious life, we cannot hope to gain the blessings of religion.

In conclusion, let us first know what Hinduism is. Then, let us take an honest oath not only for our sake, but for the sake of the whole world—that we shall, when once we are convinced of the validity of this Eternal Truth, try honestly and consistently to live its values.

**அன்பான கலசம் வாசகர்களே!**

சைவ முன்னேற்றச் சங்கத்தின் காலாண்டு ஆன்மிக இதழான கலசம் அடுத்த ஆண்டு 25ஆவது வயதை அடைகிறது. கடந்த 25 ஆண்டுகள் நீங்கள் அளித்த ஆதரவும் தெரிவித்த கருத்துக்களுந்தான் தொடர்ந்து இதழ்கள் வெளியிட எமக்கு ஊக்கம் அளித்துக்கொண்டிருக்கின்றன.

தங்கள் ஆதரவைத் தொடர்ந்து வழங்கும்படி பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். நன்றி.

ஆசிரியர்.

# சற்புத்திரர்களே ஆபரணம்

ஒரு ஊரில் ஒரு பெரிய செல்வன் இருந்தான். அவன் மனைவி விலையேறப் பெற்றவைகளும் அழகுள்ளவைகளுமாகிய அநேக இரத்தின ஆபரணங்களையும், பொன் ஆபரணங்களையும் ஆடைகளையும் வைத்திருந்தாள். அவளுக்கு தான் அணியும் ஆபரணங்களையும் ஆடைகளையும் எல்லோரும் பார்த்து மகிழ்ந்து புகழ்ந்து பேசுவதைக் கேட்பதில் அளவு கடந்த ஆசையுள்ளவளாகவும் இருந்தாள்.

ஒரு நாள் அந்தச் செல்வந்தனையும் மனைவியையும் பக்கத்திலிருந்த ஊரில் உள்ள இன்னுமொரு பிரபு தனது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தான். செல்வந்தனுடைய மனைவியும் தான் அணிந்திருந்த ஆபரணங்களையும் ஆடைகளையும் பற்றி அடிக்கடி அந்த பிரபுவின் மனைவிக்கு அவைகளின் விலையையும் தன்னிடமிருக்கும் இன்னும் பலவற்றையும் சொல்லிப் புகழ்ந்து தற்பெருமை பாராட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் பிரபுவின் மனைவியோ அவைகளைப்பற்றி சிறிதும் கவனம் செலுத்தாவண்ணம், தன் வீட்டு வேலைகளிலும் அன்றைய விருந்துக்கு வந்தவர்களையும் உபசரிப்பதிலிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தாள். அதைக் கவனித்த செல்வந்தனின் மனைவி தன்னிடம் உள்ளதிலும் பார்க்கப் பிரபுவின் மனைவியிடம் கூடுதலாக இன்னும் விலை மதிப்பற்ற பொருள்கள் இருக்குமோவென நினைத்து, "உன்னிடத்திலுள்ள ஆபரணங்களை நான் பார்க்க விரும்புகிறேன். எனக்குக் காட்டுங்களேன்" என்று பிரபுவின் மனைவியிடம் மெதுவாகக் கதைவாக்கில் கேட்டாள். அதற்குப் பிரபுவின் மனைவியோ, "இப்போது என்னுடைய ஆபரணங்கள் என்னிடமில்லை. அதாவது வீட்டிலில்லை. வெளியிலே போயிருக்கின்றன. சற்று நேரத்தில் அவைகள் வந்துவிடும். வந்தவுடன் உன்னிடம் காட்டுகிறேன்" என்றாள்.

சிறிது நேரத்தில், அவருடைய புத்திரர்களாகிய சிறுவர்கள் பாடசாலையிலிருந்து வந்தார்கள். அவர்களைக் கூப்பிட்டு, அந்த விருந்தினராக வந்திருந்த செல்வந்தனின் மனைவியிடம் காட்டி "இவர்கள்தான் என்னுடைய விலைமதிப்பிலாத ஆபரணங்கள்" என்று சொன்னாள். அந்தப் பிள்ளைகளினுடைய சகோதர ஒற்றுமைமையையும் மற்றைய நற்குணங்களையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்த செல்வந்தனின் மனைவியானவள், பிரபுவின் மனைவியுடைய புத்தியை வியந்து, "இப்படிப்பட்ட நல்ல பிள்ளைகளே விலைமதிக்க முடியாத ஆபரணம்" என்று மனதில் உறுதி செய்து கொண்டாள்.

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

## ஆண்டவனும் அடியாரும்

**ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமை நிலையத்தில் இட்ட அஞ்சல் அஞ்சல் பெட்டிக்கு வராது; அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்குச் சேர்ந்துவிடும்.**
**அஞ்சல் தலைமைநிலையம் இறைவன்; அஞ்சல் பெட்டி அடியார்கள் என்று உணர்க!**
**- திருமுருக கிருபானந்த வாரியார்**



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

அதிகாரம்: 08 குறள் : 72 Chapter : 08 Kural : 72

## அன்புடைமை - Kindness of Love

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு**

பொருள்:
அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவர் - அன்புடையவர்கள், அப்பொருள்கள் மட்டுமன்றித் தம் உடம்பாலும் பிறருக்குப் பயன்படுவர்.

Meaning:
Those who are destitute of love appropriate all they have to themselves; but those who possess love consider even their bones to belong to others

குமணன் என்றொரு அரசன் மக்கள் அனைவராலும் நேசிக்கப்பட்டவனாக அரச பரிபாலனம் நடத்தி வந்தான். ஏழைகளைக் காப்பாற்றி, குடிமக்கள் விருப்பப்படி அனைத்தையும் அவர்களுக்கு அளித்து, கருணையோடும் அர்ப்பணிப்போடும் வாழ்ந்திருந்தான். அவனுடைய சகோதரன் பெயர் அமணன். அவன் கொடூரமானவன்; நம்பத்தகாதவன். குமணனுடைய தருமசிந்தையை விரும்பாத அவன், பொதுச் சேவைகளைத் தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தால் அரச பரிபாலனம், செல்வம் எல்லாவற்றையும் இழந்து பலவீனப்பட்டுவிடும் என்று குமணனை எச்சரித்ததோடு, இராய்ச்சியத்தல் பாதியைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி குமணனிடம் கேட்டான். குமணனும் அவ்வாறே செய்தான்.

பாதி ஆட்சி அமணன் கையில் வந்த பின்னர், நாளடைவில் நாட்டு மக்கள் மிகவும் துன்பங்களுக்கு உள்ளானார்கள். உழவுத் தொழிலாளர்களுடைய நெற்பயிர் செய்கையைத் தடைசெய்தான். ஏழைகள் பட்டினியால் வாடினார்கள். இதன் விளைவாக, மீண்டும் அமணன் குமணனை நாடி இராய்ச்சியத்தின் மறுபாதியையும் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டான். யாரும் எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்லாத அருங்குணம் கொண்ட குமணன், இராய்ச்சியத்தை முழுமையாகத் தன் சகோதரனிடம் ஒப்படைத்தபோது, குமணனை நாட்டை விட்டு வெளியேறும்படி அமணன் கட்டளையிட்டான். குமணன் காடொன்றில் தஞ்சம் புகுந்தான்.

நேசத்திற்குரிய தங்களுடைய மன்னன் இல்லாத நாட்டைக் குடிமக்கள் விரும்பவில்லை. கவலை கொண்டார்கள். ஒருவரையொருவர் சந்திக்கும் போதெல்லாம் பேசிக்கொண்டார்கள். இவற்றினால் பொறாமை கொண்ட அமணன், குமணனின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு அதி உயர்

சன்மானம் வழங்கப்படும் எனப் பகிரங்கமாக அறிவித்தான். யாரும் இதனைச் செவி மடுக்கவில்லை.

குமணன் அரச பதவியிலிருக்கும்போது, அவனது அரண்மனைக்கு அடிக்கடி வந்து பாடிப் பரிசில்கள் பெற்றுச் செல்லும் புலவர் ஒருவர், ஆன்ம உணர்ச்சி பெறுவதற்காக ஒருநாள் அந்தக் காட்டினுள் நடந்து சென்றார். எதிர்பாராத விதமாக அங்கே குமணனைக் கண்டதும், உடனடியாக அவனைப்பற்றி ஒரு பாடலைப் புனைந்து பாடினார். புலவரைக் காண நேர்ந்ததில் குமணன் மகிழ்ச்சியடைந்தபோதும், வழமைபோல் புலவருக்குப் பரிசில் எதுவும் அளிக்கும் நிலையில் தான் இல்லையே என்றெண்ணி மனம் நொந்தான். திடீரென அவனுடைய எண்ணத்தில் ஒரு யோசனை பளிச்சிட்டது.

"புலவரே! என்னுடைய தலையைக் கொண்டு வருபவருக்கு உயர்ந்த சன்மானம் வழங்கவிருப்பதாக எனது சகோதரன் அறிவித்திருப்பதைக் கேள்வியுற்றேன். தாங்கள், என்னைக் கொன்று, என் தலையை எடுத்துச்சென்று சன்மானம் பெறுங்கள். உங்களுக்குத் தருவதற்கு என்னிடம் இதைத்தவிர வேறு எதுவுமில்லை" என்று கவலை மிகுந்து குமணன் சொன்னதைக் கேட்ட புலவர், உணர்ச்சி மேலிட - உள்ளம் மிக நொந்து - விம்மியழுது, "வெகுமதி கிடைத்தாலும் நான் இந்த இழிசெயலைச் செய்யமாட்டேன்" என்று குமணனிடம் கூறித் திரும்பிச் சென்றுவிட்டார்.

Once upon a time, there was a king called Kumanan who was loved by everyone. He always helped the poor and provided whatever his subjects wanted. Such was his kindness and dedication. Kumanan had a brother whose name was Amanan. Amanan was cruel and irresponsible. He warned Kumaran that, if he continues his charity work, soon the wealth of the Kingdom would be exhausted and so asked Kumanan to part with his share-half of the Kingdom to himself. Kumanan obliged to his demand.

After getting half he Kingdom Amana in his rule, ill treated the poor and forbade the farmers to cultivate food and so on. Economic problem arose and starvation gripped the poor. As a result Amanan sought Kumanan's help asking him for the other half of the Kingdom also. Kind hearted Kumanan, who never said 'no' to anyone agreed for this. As soon as he got the whole Kingdom for himself, Amana made Kumanan to leave the country. Kumanan went into the jungle to live.

All the people of he country were unhappy by the absence of their beloved king Kumanan and always praised him when talking among themselves. This made Amanan feel jealous. Hence he made an announcement, saying, whoever could bring Kumanan's head, he would reward that person with large sum of money. No one responded to this announcement.

One day, a poet, who often visited Ramanan's kingdom and recited poems praising him, went to the jungle to get inspiration. There, the poet was surprised to see Kumanan in the jungle. He immediately started reciting a poem on Kumanan. Eventhough Kumanan was so happy to see the poet and hear him there, he felt sad because he couldn't reward the poet with any gift in the jungle. Suddenly, an idea sprung in his mind. He looked at the poet and said, 'I hear that Amanan has put a price on my head. Why don't you take my head and get the reward?' The poet got emotional and began to cry saying that he wouldn't do something so immoral and cruel and walked away.

(Hello children! Your parents or relations may know the rest of this story. If not, why don't you visit the following web and find out? http://stories4u.50webs.com/Devotees/kumanan.htm



லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 15-10-2016 அன்று வெளியிடப்படுகிறது.